




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரிபாஸ் ரிஸ்லா









அகிலா ஜவுபர்

SRI LANKA PEN CLUB

நிர்வாக சபை 2023

**தலைவர்**

சம்மாந்துறை மஷூறா.,JP

**உப தலைவர்**

ஷாமென் நிஸாம்டீன். கட்டுகஸ்தோட்டை.

**செயலாளர்**

N M ஆரிபா. ஏறாவூர்

**உப செயலாளர்**

முப்லிஹா பிர்தௌஸ்,காத்தான்குடி.

**பொருளாளர்**

M P பர்ஸானா. நிந்தவூர்

**கணக்காய்வாளர்**

றிப்கா அன்சார், சாய்ந்தமருது.

**இணைப்பாளர்கள்**

ஜெஸீமா முஜீப், மருதமுனை.
றமீஸ் நிஸா நௌஷாத், சம்மாந்துறை.
M C ஜூவைரியா, தம்பாலை


**செயற்குழு அங்கத்தவர்கள்**

லைலா அக்ஷியா, மொரட்டுவ.
மஹீஸா பானு ஜெஸூர், சம்மாந்துறை
ஜெஸீனா நிஸ்றீன், சாய்ந்தமருது
ஜலீலா முஸம்மில், ஏறாவூர்
றமீனா ஐயூப், ஹூனுப்பிட்டி
றமீஸா யாஸீன், நீர் கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரிபாஸ் ரிஸ்லா



அகிலா ஜவுபர்

## SRI LANKA PEN CLUB

நிர்வாக சபை 2023

**தலைவர்**

சம்மாந்துறை மஷூறா.,JP

**உப தலைவர்**

ஷாமென் நிஸாம்டீன், கட்டுகஸ்தோட்டை.

**செயலாளர்**

N M ஆரிபா. ஏறாவூர்

**உப செயலாளர்**

முப்லிஹா பிர்தௌஸ்.காத்தான்குடி.

**பொருளாளர்**

M P பர்ஸானா. நிந்தவூர்

**கணக்காய்வாளர்**

றிப்கா அன்சார், சாய்ந்தமருது.

**இணைப்பாளர்கள்**

ஜெஸீமா முஜீப், மருதமுனை.

றமீஸ் நிஸா நௌஷாத், சம்மாந்துறை.

M C ஜீவைரியா, தம்பாலை

**செயற்குழு அங்கத்தவர்கள்**

லைலா அக்ஷியா, மொரட்டுவ.

மஹீஸா பானு ஜெஸீர், சம்மாந்துறை

ஜெஸீனா நிஸ்றீன், சாய்ந்தமருது

ஜலீலா முஸம்மில், ஏறாவூர்

றமீனா ஐயூப், ஹுனுப்பிட்டி

றமீஸா யாஸீன், நீர் கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான
SRI LANKA PEN CLUB
வெளியீடு

# அவரி 6

ஏப்ரல் - மே - ஜூன் 2023

ஒளி 2 கதிர் 2

## ஆசிரியர் குழு

நிர்வாக ஆசிரியர்
சம்மாந்துறை மஷூறா.

சஞ்சிகை ஆசிரியர்
வஃபீரா வஃபி, கொழும்பு.

செயற்குழு
ஷாமென் நிஸாம்டீன், கட்டுகஸ்தோட்டை.
என்.எம்.ஆரிபா, ஏறாவூர்.
ஜலீலா முஸம்மில், ஏறாவூர்
லைலா அக்ஷியா, மொரட்டுவ.
எம்.பி.பர்ஸானா, நிந்தவூர்.
அறபா மன்சூர், கண்டி.
முப்லிஹா பிர்தௌஸ், காத்தான்குடி.

நிர்வாக அலுவலகம்
மஷூறா மஹால்
4 C , 5 லேக் வீதி, மருதமுனை 4 - இலங்கை

0765363434 / 0770696559 / 0672261044

The AVARY
a journal published by
SRI LANKA PEN CLUB

design & layaout by
*Rehsan Graphics*

## உட்புறத்தை அலங்கரிக்கும் படைப்புகளுக்குரிய படைப்பாளிகள்


பஸ்லா பர்ஸான்
எம்.ரீ.தஸ்லீமா
முப்லிஹா பிர்தவ்ஸ்
ஜலீலா முஸம்மில்
நிஸ்மியா நிஸாம்
பௌசியா கபூர்
சுஸானா முனாஸ்
றமீஸா யாசீன்
ஹாஜறா கலீலுர்றஹ்மான்
ஷாமென் நிஸாம்டீன்
ஜெஸ்மின் றமீஸ்
சுஹைதா ஏ. கரீம்
லைலா அக்ஷியா
ஜனிறா ஜலீல்
அரபா மன்சூர்
ஹகீமா அமீனுதீன்
கிண்ணியா சபீனா
கமர்ஜான் பீபீ
ஹஸனியா இர்பான்
லரீபா பதுர்தீன்
நளீபா அஸீஸ் அஸீம்
சதீகா றஸ்லி
பஸ்லியா சித்தீக்
ஐனூன் கதீஜா அன்ஸார்
சம்மாந்துறை மஷூறா
தம்பாலை ஜுவைரியா
றமீஸ் நிசா
ஷபீனா இப்றாஹிம்
எம்.எஸ்.றஸ்மியா
சர்ஜிலா பர்வீன்
ரியாஸ் ரிஸ்லா (கலர் சித்திரம்)
அகீலா ஜவுபர் (கறுப்பு வெள்ளை சித்திரங்கள்)

படங்கள் உதவி **மின்னத் ஸறா பரூஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாக ஆசிரியரிடமிருந்து...



அவரி ஆறாவது இதழில் சந்திப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

எமது ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பான Sri lanka pen club இன் வெளியீடான அவரி அவர்தம் ஆற்றல்களுக்கு களம் தருவதில் பெருமிதம் அடைகிறது.

ஒரு சஞ்சிகையின் பிரசவம் எத்தனை சுமைகளையுடையது என்பதை தெரியாதவர் களில்லை. ஒவ்வொரு வெளியீட்டிற்கும் வெவ்வேறு ஆசிரியர்களிடம் பொறுப்பளித்து அவர்களின் ஆற்றலுக்கும் மதிப்பளித்து வருகிறோம். அந்த வகையில் இம்முறை வஃபீரா வஃபி பொறுப்பேற்றிருக்கிறார். வஃபீரா ஏற்கனவே முத்தமிழ் கலசம் எனும் சஞ்சிகையின் ஆசிரியராயிருப்பவர். எனவே அவரது அனுபவம் இம்முறை அவரிக்கு உரமாயமையலாம். வஃபீரா நிதானமான போக்குடையவர். ஒரு படைப்பாளி. 'புள்ளியில்லாக் கோலம்' எனும் ஹைக்கூ நூலையும் வெளியிட்டுள்ளார். கைத்திறன் கலைஞர். அனைவரையும் அனுசரித்து போகக்கூடியவர்.எனவே இந்த அவரியின் தரத்தில் எனக்கு பெரும் எதிர்பார்ப்புண்டு.

தேனீக்கள் போல் செயற்படும் எமது அமைப்பின் ஆற்றலுள்ள பெண்கள் அவரியின் உருவாக்கத்திலும் செயற்பட்டிருக்கின்றனர்.

அவரி சஞ்சிகையின் ஆசிரியை வஃபீரா வஃபி அவர்களையும் அவரி 6 சஞ்சிகைக் குழுவினரையும் மனதார உவக்கிறேன்.

எமது அமைப்பின் வெற்றிப்பயணத்தில் கைகோர்த்திருக்கும் எமது அமைப்பின் அனைத்து அங்கத்தவர்களையும் மனதார நேசிக்கிறேன்.உங்கள் கைகளில் தவழும் அவரியின் வளர்ச்சிக்கு உங்களால் என்ன செய்ய முடியுமென்று சிந்திக்க வேண்டி விடைபெறுகிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

இலக்கிய வித்தகர்
**சம்மாந்துறை மஷூறா.**
நிர்வாக ஆசிரியை 'அவரி'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சஞ்சிகை ஆசிரியர் உரை

*தோள் சேரும் ஆற்றல் மிக்க பெண்களின் அணி*
*தூர்வாரட்டும் சமுதாயச் சாக்கடைகளை அவர்தம் எழுத்தாணி(கள்)*

அன்பார்ந்த உறவுகள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மத்துல்லாஹி வபறக்காத்துஹு!

எமது இந்த ஆற்றல் மிக்க பெண்களின் அமைப்பென்ற விருட்சமானது எண் திசைகளிலும் கிளைபரப்பி உலகளாவிய ரீதியில் வியாபிக்க, எமது ஸ்ரீலங்கா பென்கிளப்பின் ஸ்தாபகரும் தலைவியுமான மஷூறா சுஹூறுத்தீன் அவர்கள் ஆணிவேராகத் திகழ்வதோடு, தன் தொலைநோக்கு சிந்தனையால் அதனை மேம்படுத்த தன்னாலான முயற்சிகளையும் மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியதாகும். திறமையானவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கான களம் அமைத்துக் கொடுத்து, அவர்களைப் பட்டை தீட்டி ஒளிர வைப்பதை தனது கடமையென கொண்டிருக்கும் இவர், பல திசைவாழ் திறமைசாலிகளை இலக்கியம் எனும் ஒற்றைப் புள்ளியில் ஒருங்கிணைத்து வெற்றிப்பாதையில் பயணப்பட வைத்திருப்பதையிட்டும் பெருமிதமடைகிறேன்.

எமது அமைப்பின் ஆறாவது காலாண்டிதழ் 'அவரி'க்கு ஆசிரியராக இயங்கும் பணி நமது தலைவி அவர்களால் இம்முறை எனக்கு வழங்கப்பட்டதையிட்டு பெருத்த மகிழ்ச்சியடைந்த அதேவேளை,அதைச் செவ்வனே செய்து முடிக்க வேண்டும் என்ற பாரிய பொறுப்பையும் உணர்ந்தேன்.

இதற்காக ஏற்கனவே கொடுக்கப்பட்டு படைப்பாளிகளால் தேர்வு செய்யப்பட்ட தலைப்புகள், அவர்களின் சிந்தனா சக்திக்கு தீனியிட்டு அவர்களின் தேடலை இன்னும் விஸ்தீரணமாக்கியுள்ளதை, இதழை வாசிக்கும்போது அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்ளலாம். இவ்விதமான தீவிரத் தேடலின் பெறுபேறுகள் எப்போதுமே காத்திரமான படைப்புகளைக் கையளிக்கும் என்பதும் திண்ணமே!

இந்த இதழுக்கான சில ஆக்கங்களை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்வதில் எனக்குக் கொஞ்சம் சிரமம் இருந்தது.இந்த விடயத்தில் அடிக்கடி ஞாபகமூட்டி, யாரையும் நான் மன அதிருப்திக்கு உட்படுத்தியிருந்தால் மன்னிப்புக் கோருகிறேன்.என்றும் ஒரு கை தட்டி ஓசை வருவதில்லை.இப்போது என்றில்லை, எப்போதுமே அனைவரும் ஒத்துழைத்தால் மட்டுமே உரிய நேரத்தில் சஞ்சிகையை வெளிக்கொணர்வது சாத்தியப்படும். ஆகவே அனைவரும் தமக்கான பொறுப்புணர்ந்து, தமது படைப்புகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய நேரத்தில் கையளித்தல் கடைசி நேர அவதியைத் தவிர்ப்பதோடு, எதிர்கால சஞ்சிகை ஆசிரியர்களுக்கும் பேருதவியாக அமையும்.

எமது அமைப்பில் எல்லாப் பெண்களும் ஏதோ வகையில் தனித்துவத் திறமை கொண்டவர்களே! இங்கு இணைந்திருப்பவர்கள் வாய்ப்புகளைப் பயன்படுத்தி தம்மை செப்பனிட்டுக் கொண்டு முன்னேறிச் சென்றால், வெளி உலகம் வியக்கும் வண்ணம் அவர்களால் சாதிக்க முடியும். இங்கு இன்னோர் உண்மையையும் நான் சொல்லியாக வேண்டும். எல்லோரையும் உயர்த்தி விடும் ஏணியாக நம் ஸ்ரீலங்கா பெண்கிளப் உள்ளதென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதை யாவரும் நன்றியுடன் கருத்தில் கொள்வோமாக! பழையவர், புதியவர்கள் என்றில்லாமல் பாரபட்சமின்றி, அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால், இங்கு இணைந்திருக்கும் பெண்களின் ஆற்றல்கள் நாளை வரலாறு படைக்கும்.

இந்த சஞ்சிகைக்காக ஆக்கங்களுக்கான படங்களை வடிவமைத்துக் கொடுத்த எமது ஸ்ரீலங்கா பெண்கிளப் உறுப்பினர் மின்னத் ஸறா பரூஸ் சகோதரிக்கும், எனது நன்றிகளை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் வேண்டும் போதெல்லாம் முகம் சுளிக்காமல், அவர் ஆற்றிய பணி அளப்பரியது. அதேபோல் அவரி 6 வெற்றிகரமாக வெளிவர முன்னணியில் நின்று உதவியோருக்கும், பின்னணியில் பக்கபலமாக நின்று கைகொடுத்த அனைவருக்கும் மனமுவந்த நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்போது போலவே இனி வருங்காலங்களிலும், யாரும், யாருடைய மனதையும் புண்படுத்தாமலும், இங்கிதமாகவும் செயற்பட்டு ஐக்கியமாகப் பயணித்தலானது எமது அமைப்புக்குப் பாரியதொரு படைபலமாக அமையும். அப்போதுதான் இந்த அமைப்பின் வெற்றியை நிரந்தரமாகத் தக்கவைத்துக் கொள்வது சாத்தியப்படும்.

இந்த இதழை வாசித்து அமைதியாகக் கடந்து விடாமல், உங்கள் கருத்துக்களைப் பகிருங்கள்! குறைகளேதும் இருப்பின், எம்மிடம் சொல்லுங்கள்! நிறைவாக இருப்பின் மற்றவர்களுக்கும் சொல்லுங்கள். அதுவே எமக்கு வலுவூட்டி வெற்றிகளை எமதாக்கும்.

அனைவரும் கரங்கோர்த்து இவ்விலக்கியப் பாதையில் நடந்து வெற்றிவாகை சூட நல்வாழ்த்துகளும் பிரார்த்தனைகளும்! இந்த அரிய வாய்ப்பை எனக்களித்த எல்லாம் வல்ல இறைவனுக்கும்,எமது தலைவி மஷூறா சகோதரிக்கும் இதயம் நிறைந்த நன்றிகளை சமர்ப்பிக்கிறேன்.

வஸ்ஸலாம்!

என்றும் அன்புடன்

**வஃபீரா வஃபி**

முத்தமிழ் கலசம் இதழாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கின் மகள்

## Daughter of the East

இயற்கை எழில்மிகு இலங்கையின் கிழக்கு கரையோரத்தில் வீற்றிருக்கும் கிழக்கு மாகாணத்தின் நாமத்தினை தேசியம் மற்றும் சர்வதேசம் என வெளிக் கொணர்ந்து, எமக்கெல்லாம் அடையாளம் தந்த கிழக்கின் விடிவெள்ளிகள் என்று போற்றப்படும் கேட் முதலியார் எம் எஸ் காரியப்பர் (பாட்டனார்) மற்றும் முன்னாள் அமைச்சர் ஏ. ஆர் மன்சூர் (தந்தை) ஆகியோரின் வழித்தோன்றலில் செதுக்கப்பட்ட 'கிழக்கின் புதல்வி' சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளீமுதீன் அவர்களைப் பற்றிய ஓர் தொகுப்பே இதுவாகும்.

வரலாற்றில் பெண்களுக்குப் போராடாமல் விடிந்ததில்லை. தங்களுக்கு மறுக்கப்படும் உரிமைகளுக்காகவும் பொது நலனுக்காவும் காலந்தோறும் பெண்கள் போராடியபடி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இவரும் அதற்கு விதிவிலக்கு இல்லை.

பல தடைகள் கடந்து தான்,

'பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும், பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே
பெண் இளைப்பில்லை காண்

என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கு ஏற்ப இன்று சர்வதேச ரீதியிலும் தடம் பதித்து எமக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றார் எம் கிழக்கின் மகள்.

இவர் ஆரம்பக் கல்வியை கல்முனை கார்மல் பற்றிமா கல்லூரியிலும் உயர் நிலைக் கல்வியை கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும் கற்றார். இக்கல்லூரி காலத்தில் மர்யம் மன்சூர் அவர்கள் தனது தந்தையைப் போன்றே கவிதை படிப்பதிலும் நாடகங்களில் பாத்திரங்கள் ஏற்று நடிப்பதிலும் ஆர்வம் காட்டினார். வருடம் தோறும் பாடசாலை மட்டங்களில் நடைபெறும் ஆங்கிலக் கவிதை போட்டி நிகழ்ச்சியில் தவறாது பங்கெடுத்து, தமது திறமையை நிரூபித்து காட்டிக் கொண்டே வந்திருக்கிறார். அதே போன்றுதான் மார்க்க கல்வியிலும் மிகவும் ஈடுபாடு உடைய மர்யம் மன்சூர் அவர்கள் குர்ஆன் மனன மற்றும் ஓதும் போட்டிகளிலும் பங்கேற்று இருப்பதுடன் இலங்கை ஒலிபரப்பு கூட்டுதாபனத்தினால் ஒலிபரப்பப்படும் விசேட முஸ்லிம் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று இருக்கின்றார். அதே சமயம் இக்காலகட்டத்தில் இருந்தே சமூக சேவைகளிலும் தன்னை அர்ப்பணித்து பல நிலையான இலக்குகளை வகுத்து எமது சமூக விடிவுக்காக விதைக்கத் தொடங்கினார்.

பின்னர் சட்டக் கல்லூரியில் முதலாம் வருட சட்டக்கல்வி பயிலும் மாணவியாக இருக்கும் போது விவாதக்குழுவின் உப தலைவராகவும் 3ம் வருட மாணவியாக இருக்கும் போது, அக்குழுவுக்கே தலைமை தாங்க தகுதியானார்.

பின்னர் சட்டக் கல்லூரியில் நடை பெறும் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ஞாபகார்த்த கிண்ண போட்டியில் வருடத்தின் சிறந்த பேச்சாளருக்கான முதல் நிலை மாணவியாக தேர்வு செய்யப்பட்டு, முதலாவது கிழக்கு மாகாணத்தின் பெண்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமை எனும் நாமத்தை சட்டக் கல்லூரியின் வரலாற்று ஏட்டில் செதுக்கி எமது பெண்களின் ஆளுமைகளை தேசிய ரீதியில் பிரகாசிக்க செய்தார். இவரது தெளிவான குரலும் கம்பீரமாகப் பேசும் அழகும் சகலரையும் ஈர்ப்புக்குள்ளாக்கியது. இக் கல்லூரி காலத்தில் சட்டக் கல்லூரி தமிழ் மன்ற பொதுச் செயலாளராகவும், முஸ்லிம் மஜ்லிஸ் உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் இவரது தலைமைத்துவப் பண்பு வெளிப்பட்டது. இக் காலகட்டம் தான் இவரின் வாழ்வில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது எனலாம்.



தனது தந்தையின் மீது தீராத அன்பும் மரியாதையும் கொண்ட இவர் தனது தந்தையையே ஒவ்வொரு செயற்பாடு களிலும் தனக்கு முன்மாதிரியாக கொண்டு காலடி எடுத்து வைக்கத் தொடங்கினார். அதுபோலவேபலசர்வதேசமாநாடுகளிலும் கூட்டத் தொடர்களிலும் வெளி விவகார சந்திப்புகளிலும் தனது தந்தையுடன் பங்கு கொண்டு தந்தையின் பக்க பலமாக இருந்தது மட்டுமல்ல, அமைச்சர் அவர் கள் தங்களின் வியூகங்கள் மற்றும் எதிர் கால செயற்பாடுகள் சம்பந்தமாக கலந்தா லோசிக்க கூடிய அளவுக்கு தனது தந்தை யின் நம்பிக்கைக்குரிய முக்கிய பாத்திரமாக ஒளிர்ந்தார்.

பின்னர் குவைத் நாட்டின் இலங்கைக் கான தூதரகத்தில் பணியாளர் பிரிவிற்கு தலைமை சட்டத்தரணியாக பணியாற்றி 1000க்கும் மேற்பட்ட பணியாளர்களின் உரிமை மீறல்கள் சம்பந்தமான வழக்கு களைத் தொடர்ந்து இருக்கின்றார். இதற்காக அப்போதுஇருந்த எமது நாட்டின் அதிமேதகு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பாராட்டையும் பெற்றிருக்கிறார். அத்துடன் குவைத் பெண்கள் சங்கத்தின் 'சிறந்த பெண் தலைமைத்துவம்' எனும் பிரிவில் அவ் வுயரிய விருதையும் அலங்கரித்தார். இவ்வாறு பல இடங்களிலும் சிறந்து விளங்கிய இவர் எதிர்கால சமூகத்தின் முன்மாதிரியான மனிதராக பிரகாசிக்கத் தொடங்கினார். இவையனைத்து உயர்ச்சிக்கும் உந்துசக்தியாக விளங்கியது இவர் தனது தொழிலின் மீது கொண்டிருந்த அளவில்லாப் பிரியமேயாகும். பின்னர் இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் ,ஐக்கிய நாடுகள் அமையம் (UN) மற்றும் பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ILO) ஆகியவற்றில் கடமையாற்றி, தொழிலாளர் நலத்திலும் பிரச்சினைகளிலும் கவனம் செலுத்தி பல சேவைகளைச் செய்துள்ளார்.

எந்த ஒரு ஆத்மாவும் மரணத்தை சுவைத்தே தீரும் எனும் இறை வசனத்திற்க மைய, ஒரு பெண் பிள்ளையை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதற்கு சிறந்த முன்மாதிரியாக இருந்த அன்புத்தந்தையின் இறை அழைப்பானது மர்யம் நளீமுதீன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவர்களின் வாழ்வில் மற்றுமொரு திருப்பு முனையாக அமைந்தது. அது இன்று வரைக்கும் வார்த்தைகளில் சொல்ல முடியாத துயர். அதை எண்ணிக் கண்கலங்காத நாளில்லை. ஆனால் அத்துயரானது மரினா மன்சூருக்கு மட்டுமல்ல முழு நாட்டிற்கும் பாரியதொரு பேரிழப்பாகும்.

இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் இரண்டு தசாப்த காலம் மிகப் பொறுப்பு வாய்ந்த வர்த்தக வாணிப அமைச்சராகவும் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சராகவும் குவைத் நாட்டிற்கான இலங்கை தூதுவராகவும் பல உயர் பதவிகளை அலங்கரித்த கறைபடியா கரம் என்றும் மிஸ்டர் கிளீன் (Mr.Clean) என்றும் பாராளுமன்றத்தில் அழைக்கப்பட்ட சேவைகளின் செம்மல் கலாநிதி அல்ஹாஜ் மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூர் அவர்கள் கல்வி, சுகாதாரம், கட்டமைப்பு, விவசாயம், வர்த்தகம் மற்றும் வாழ்வாதாரம் என பல துறைகளிலும் இனப்பாகுபாடின்றி நிலையான அபிவிருத்திகளைப் பங்கிட்டு இருக்கின்றார். கல்விக்கு உயிர் கொடுத்தோர் என்றும் மரணிப்பதில்லை எனும் நபி மொழிக்கு அமைவாக ஒவ்வொரு பிரதேசங்களிலும் நூலகங்கள், பாடசாலைகள், கல்லூரிகள் என அமைத்து கிழக்கை மிளிரச்செய்த அன்னாரின் சேவைகள் இன்றுவரை அவர் விட்ட இடத்திலேயே தனித்து நிற்கின்றன.

இதனால் தான் இவரை என்றும் எமது மண் நன்றியுடன் நினைவு கூறுகிறது.

தனது தந்தையின் மீது தீரா அன்பும் மரியாதையும் கொண்ட அமைச்சரின் கனிஷ்ட புதல்வியான மர்யம் மன்சூர் நளீமுதீன் (மரினா மன்சூர் ) அவர்களுக்கு தன் தந்தையின் பின்னர் காணப்பட்ட அரசியல் கலாச்சாரம் மற்றும் அரசியல் வாதிகளின் மீது ஏற்பட்ட அதிருப்தி என்பவற்றினால் 'விட்ட இடத்திலிருந்து தொடங்குவோம்' எனும் நோக்குடன் எமது சமூதாய முதல் நிலைக்காக வழிகாட்டி, ஒளி ஊட்டும் தூய எண்ணத்தில் தனது தந்தையின் மறைவுக்குப் பின்னர் A. R. MUNSOOR FOUNDATION ஐ பல அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் ஸ்தாபித்து, சர்வதேச ரீதியிலும் இவ் உன்னத சேவைகளை, பல சவால்களையும் பல கசப்பான அனுபவங்களையும் கடந்து இறைவனின் உதவியால் தலைமை தாங்கி பல சமூக முன்னேற்றத் திட்டங்களை தீட்டி பல சேவைகளை செய்து வருகின்றார்.

நிலையில்லா வறுமையைக் காரணங் காட்டி நிலையான கல்வியை யாரும் விட்டுவிடக் கூடாது எனும் பிரதான நோக்கில் பெண்கள் உரிமை, சமூக விழிப்புணர்வு, வாழ்வாதார வசதிகள், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், ரமழான் மாத விஷேட உதவி, அசாதாரண கால உலர் உணவு வசதிகள், குடி நீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வசதிகள் மற்றும் வழிகாட்டல் கருத்தரங்கு என ஏ. ஆர். மன்சூர் பௌன்டேசனின் சேவைகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

இவையனைத்துக்கும் பின்னணியில் எம் சமூகத்தின் துயர் துடைப்பதற்காக இரும்புப் பெண் சகோ. மர்யம் நளீமுதீன் அவர்கள் அவுஸ்திரேலியா நாட்டில் முழுநேர சட்டத் தரணியாகவும் அவுஸ்திரேலிய முஸ்லிம் பெண்கள் கவுன்ஸிலின் தலைவராகவும் கலை, கலாச்சாரம் மற்றும் பல பெண்கள் உரிமை சார்ந்த பல தொண்டு நிறுவனங்களில் அங்கத்துவம் வகித்திருந்தும், பல வேலைப் பளுக்களுக்கு மத்தியில் அல்லும் பகலு மாக தியாகம் செய்தே இவ்வுன்னத பணியினை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றார். இவைக்கான காரணமாம் 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா' என்பதைப்போல அவர் 'சரித்திர நாயகன், கறைபடியா கரத்தினை பூண்ட மர்ஹூம் அல்ஹாஜ் ஏ.ஆர்.மன்சூர் அவர்களின் வழித்தோன்றல்' என்பதே ஆகும். அதற்கான பிரார்த்தனைகளும் பாராட்டுக்களும் அவரையே சாரும்.

இலங்கையில் முதலாவது பெண் ஆஸ்திரேலியா முஸ்லிம் பெண்கள் கவுன்சிலின் முன்னாள் செயலாளராகவும் இந்நாள் தலைவராகவும் கடமையாற்ற மர்யம் மன்சூர் நளீமுதீன் அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற அங்கீகாரமானது, இலங்கையர்கள் அனைவரும் பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும். இதன் மூலம் சர்வதேச ரீதியில் எமது பெண்களின் ஆளுமையினை இன்னும் பிரகாசிக்கச் செய்துள்ளார். தான் தலைமை தாங்கும் இவ்வமைப்பை வரலாற்றில் இல்லாதவாறு அவுஸ்ரேலியாவிலும் பிரதமர் மற்றும் அமைச்சர்களின் பார்வைக்கு கொண்டு சேர்த்து பல சேர்த்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகின்றார். விசேடமாக ஆப்கானிஸ்தானில் இருந்து புலம்பெயர்ந்து கொண்டிருக்கும் அகதிகளுக்கான பல சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அது மட்டுமல்லாது இலங்கையில் கோவிட் தொற்றுக்குள்ளான பச்சிளம் குழந்தை கள் என்று பாராமல் ஜனாஸாக் கள் தீயூட்டபட்ட உரிமை மீறல் சம்பவத்திற்கு எதிராக ஆஸ்திரேலியாவின் மெல்போர்ண் நகரில் உள்ள இலங்கையர்கள் அனைவரையும் திரட்டிய கண்டன போராட்டத்தின் ஏற்பாட்டுக் குழுவில் மிக முக்கியமானவர்களில் ஒருவராக செயற்பட்ட இவர், அப் போராட்டத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் ஆஸ்திரேலியாவின் பல அரசியல் வாதிகளையும் மனித உரிமைகள் சார்ந்த சர்வதேச அமைப்புகளையும் ஊடகங்களையும் பங்குபெற செய்வதில் பெரும் பங்காற்றி சர்வதேசத்தில் எமது மக்களின் நசுக்கப்பட்ட குரலை ஒலிக்கச் செய்தார். அதுமட்டுமல்ல இலங்கையிலும் கூட மஹியங்கனையைச் சேர்ந்த மசாகிமா எனும் ஒரு அப்பாவிப் பெண் தர்மசக்கரம் பொறிக்கப்பட்ட ஆடை அணிந்தாக கூறி அநீதிக்குப் புறம்பாக கைது செய்யப் பட்டதை எதிர்த்து முதலாவது ஊடக மாநாடு ஒன்றையும் நடாத்தி அப் பெண்ணுக்கு நீதி கிடைக்க வேண்டி சர்வதேச ரீதியில் குரல் கொடுத்து மிக முக்கிய பங்காற்றினார். இதனுடன் முற்றுப் பெறவில்லை அவரது பணி. அவ்வப்போது இனவாதிகளினால் அவிழ்த்து விடப்படும் முஸ்லிம் பெண்களின் ஆடை விடயம் மற்றும் முஸ்லிம் தனியார் சட்டம் மறுசீரமைப்பு ஆகியவற்றில் கூட எமது அடிப்படை உரிமையை பாதுகாத்து எமது இருப்பை நிலை நாட்ட பல முயற்சிகள் செய்து நாட்டின் அதிமேதகு ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் அகில இலங்கை ஜாமியத்துல் உலமா ஆகியவற்றின் பார்வைக்கு எமது நீதமான கோரிக்கைகளை எடுத்துக்காட்டி சட்டரீதியாக எம் சமூகத்தின் மீது அவிழ்த்து விடப்படும் உரிமை மீறல்களுக்கு குரல் கொடுத்து தனது முயற்சியால் அவற்றை தடுத்து எமது உரிமையை பல முறை மீட்டெடுத்திருக்கிறார். இவ்வாறு கிழக்கு மண்ணின் மகளின் பெருமைகளை சொல்லிக் கொண்டே போகலாம்.

**ஷாமென் நிஸாம்டீன்**
உபதலைவர் SLPC

---

## ஹைக்கூ

**வெளிநாட்டு வேலை**
**விக்கும் போதெல்லாம் தேடுகிறேன்**
**தலை தட்டும் அம்மாவின் பாசம்**

**அறுபட்ட இறக்கை**
**இரணமின்றி பேசும்**
**வளர்ப்புக் கிளி**

**எந்த நீதிமன்ற வக்கீல்கள்?**
**கருப்பு மேலங்கிகளுடன் கடற்கரையில்**
**உலவும் பெங்குவின்கள்**

**எவ்வளவு வெளுத்தாலும்**
**விடாப்பிடியாக**
**சலவைக் குறி**

**அனாதை இல்லத்தில்**
**அன்னையர் தினக் கொண்டாட்டம்**
**புகைப்படங்களை நனைக்கும் கண்ணீர் துளிகள்**

**சர்ஜிலா பர்வீன்**

## ஹைக்கூ

**கஜுராஹோ சிற்பங்கள்**
**புதிதாக மாறி வரும்**
**மேகங்களின் வடிவங்கள்**

**குரங்குக் குட்டி**
**கிளைக்கு கிளை தாவும்**
**சிறகொடிந்த காகம்**

**அழகு மயில்**
**ஆடியாடி இறங்கி வரும்**
**உதிர்ந்த இலை**

**பறக்கும் விமானம்**
**கடலில் விழுந்து சிதறும்**
**நிலவின் விம்பம்**

**கூடும் மேகங்கள்**
**ஒன்றைப் போல் வேறில்லை**
**வெடித்த சோளப்பொரி**

**– வஃபீரா வஃபி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிகரில்லாத் தாய்மை

பெண்மைத் தருவை ஏந்திடும் வேர்
உண்மை உறவாய் வந்திடும் சீர்
இம்மை சிறந்திட வலம்வரும் தேர்
நன்மை பிறந்திட உயிர்த்திடும் பார்

குழந்தைக் கனிகள் குலவியே பெற்று
உடந்தையாய் இனிதே உலவிடும் ஊற்று
பெண்ணவள் அடைந்திடும் பேரின்பப் பற்று
மண்ணிலே கிடைத்திட்ட மகத்தான கீற்று

இறையின் படைப்பிலே சிறந்தது தாய்மையே
இல்லையேல் தாய்மையும் படைப்புகள்
பொய்மையே
மொழியும் நாடும் புவியும் இங்கே
வழியாம் உவமைத் தாய்மைப் பாங்கே

அன்பும் அமுதும் இணைத்தே அணைத்து
இன்பம் ததும்ப ஆக்கிடும் விருந்து
தாயின் மடியோ தாலாட்டைப் பகர்ந்து
நோயின் பிடியைத் தகர்த்திடும் மருந்து

ஆக்கம்
**பஸ்லா பர்ஸான்**
காத்தான்குடி

# தாய்மைக்கில்லை நிகர்

ஓராயிரம் பொருள் பொதிந்த
ஒரு வார்த்தைக் கவிதையாய்..
புரியாத புதிராகவே..
பூமியில் உலவும் தேவதை..!

வான் மழையாய்..
உளம் குளிர....
வாரியணைத்து ..
பாசம் பொழியும்..நீ
இறையோனின் படைப்புக்களின் ...
இணையில்லா சாட்சி!

கருவில் உயிர் சுமந்து..
கண்களில் வலி சுமந்து...
நிகரில்லாத் தாய்மையோடு..
நீதமாய் வாழ்பவள்!!

நீராய்..நிலமுமாய்...
நித்தமும் போராடி..
வேராய் மறைந்திருந்து...
விழுதுகளை தாங்குவாள்.!

தாய்மைப் பேறுபெற்று....
தன் பாதத்தடியினிலே...
சுவனத்துப் பூங்காவினைச் ....
சொந்தமாக்கிக் கொண்டவள்.!!

கடலளவு கவலையெனினும்...
கல்பினிலே மறைத்து வைத்து....
புன்னகை பூக்கள் தூவி.. எமக்கு
புது வாழ்வு மலரவைப்பாள்..!!

ஒரு கையில் இவ்வுலகம்....
மறு கையில் அவள் தாய்மை..
எடையெதற்கு அதிகமென...
இயற்கையே வியந்து நிற்கும்..!!

விரல் பிடித்து நடை பழக்கி ...
விடியும் வரை கதைகள் சொல்லி..
உறங்காமல் விழித்திருக்கும்..
உத்தமியே உன் தாய்மை ....
இவ்வுலகை விட..
உயர்ந்ததுவே...!!

**எம்.ரீ.தஸ்லீமா**
சம்மாந்துறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகின் விலாசம்

பெண்ணே.....
உன் தங்கப் பாதம்
தரை தொட
தத்தித்தத்தி நடந்து
தத்தை மொழி பேசிச் சிரித்த
உன் மழலை முகம் அழகு....

துறு துறுவென
ஓடி விளையாடி
பட்டாம்பூச்சியாய்
பறந்து மகிழ்ந்த
உன் பேதை முகமோ
அழகிலும் அழகு....

கன்னத்தில் சின்ன
உரோமங்கள் படர்ந்திருக்க
புருவமோ வில்லென
வளைந்திருக்க
அதரமோ இயற்கை
அழகுடன் மிளிரும்
பெதும்பையாய்
நீ பேரழகு....

வியர்வைத் துளிகள்
முத்தென முகம் தொட
சமையலறையிலும்
வீட்டுத் திண்ணையிலும்
பரபரவென
பம்பரமாய்ச் சுழன்று
பணிவிடை செய்யும் போது
ஒரு மங்கையாய் நீ
மகா அழகு.....

மடந்தை பருவமதில்
மகவினைச் சுமந்து
மா பெருமையுடன் ஈன்று
பார் போற்றும் பிள்ளையாய்
பரிணமிக்கச் செய்த கணம்
சாதித்த பெருமையில்
பூரிக்கும் உன் முகம்
பூவழகு.....

அறிவில் மிகைத்த
அரிவையாய்
அப்பப்பா நீ அழகு....
தெளிவு நிறைந்த
தெரிவையாய்
தெள்ளிய அழகு....

நரை கண்ட பின்னும்
பேரர்களைப் போற்றி வளர்க்கும்
பேரிளம் பெண்ணாய்
நீ பேரழகு....

இத்தனை அழகு
இயற்கையாய் கலந்திருக்க
ஒப்பனை எனும் பெயரில்
முகப்பூச்சுக்களுடனும்
உதட்டுச் சாயத்துடனும்
நீ மாறுவேடம்
பூண்டிருப்பதேனோ

ஒளி தரும் நிலவதோ
தன் கறை மறைக்க
ஒப்பனை செய்ததில்லை
ஆனால்
ஒளி தந்து உலகை ஆள்கிறது

மணம் தரும் மலரதோ
தன்னை மெருகூட்ட
நிறச்சாயம் பூசியதில்லை
இயற்கையின் வண்ணங்களே
அதன் கோலமாயிருக்க
மலர்ந்து சிரிக்கின்றது
குயிலுக்குக் குரல்தான்
இனிமை
மயிலுக்குத் தோகைதான்
அழகு
இன்னும்
மானுக்குப் புள்ளியும்
தேனீக்கு சுறுசுறுப்பும்
சேர்வதுதான் அழகு

கன்னத்து உரோமங்களை
மழித்து
இரசாயனம் கலந்த
பென்சில்களால்
புருவம் சமைத்து
வண்ணச்சாயத்தில் கலந்து
அதரம் மிளிர
எண்ணிக் கணக்கிட முடியா
பூச்சுக்களால்
உன் முகச்சுவற்றுக்கு
வண்ணம் தீட்டுகிறாய்

ஒப்பனையே
அழகின் விலாசமென நினைத்து
மாறுவேடம் பூணுகிறாய்

அழகின் விலாசமது
அன்பு நிறைந்த அகமும்
பண்பு நிறைந்த நடத்தையும்
புன்னகை அணிந்த
வதனமும்தான் என்பதை
எப்போது நீ உணர்வாய்?

ஜெஸ்மின் றமீஸ்
காத்தான்குடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**I m hungry ..!**

No matter
How many times I utter it
It doesn't get to you...
Sambar without salt and spices
Would it be delicious...?!

Don't you know
I prefer my coffee
With less suger...?
Can't you make
Appetizing meal
Same as my mother?

Aromatic and savory
Should be the meat curry
Chapati and chutney
Even Dosa and Idli
Should be spicy

I did nothing really
But damned her honour daily
Yet....
To complete the chores
She didn't fail at all
Deliciously cooked meal
She always served with zeal

Yet, fussy me
Criticized and killed her
With guilt I'm lamenting over
While she's gone forever

Remorseful and distressed
I've become, over the loss
Of a soul who was a mother
A fan and a friend altogether

Today. None is there
To serve me and take care
No longer I bother
About the taste and flavour
Because I m hungry...

Translated by :
**Mareena Ilyas Shafee**
Original poem by :
Shuhaitha A Careem

# பசிக்கிறது எனக்கு . .

எத்தனை தடவ சொன்னாலும்
உறைக்குதா பாரு .
சாம்பாரில் உப்பும்
உறைப்புமில்லாமல் எப்படி ......?

காப்பியில் சீனி கம்மியாக போட்டருக்கலாம்
சமையலில்
கொஞ்சம் வாய்க்கு ருசியாய்....
அம்மா போல் இல்லை.

இறைச்சிக்கறியில் தூக்கலாய்
தூள்கள் சேத்திருக்கலாம்.
சப்பாத்தியும் சட்னியும்
தோசைக்கும் இட்லிக்கும்
காரமாய் செய்திருக்கலாம்

எல்லாமே நிறைவாக குறைவின்றி
பார்த்துப் பார்த்து செய்தவளை
ருசியாக சமைத்து பரிமாறியவளை
குறை சொல்லி கொன்று விட்ட
குற்ற உணர்வு .
நிறைவாகச் சென்றுவிட்டாள்.
பொறுமைசாலி .

என் ரசிகையை தோழியை
தாயை இழந்து விட்ட தவிப்பு .
அன்பாக அக்கறை காட்டியவளில்
கோபப்பட்ட எனக்கு ....

பசிக்கிறதா எனக் கேட்க
ஆளில்லாத போது....
பசிக்கிறது என்று யாரிடம்
போய்க் கேட்பது .
இப்போது நினைக்கிறேன்
உன்னிடம் கோபப்பட்டதை....

இன்று ருசிக்க வேண்டாம்
பசிக்கிறது எனக்கு....

திருமதி சுஹைறதா ஏ கரீம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



– லரீபா பதுர்தீன்

# அவள் விடுதலையாகிறாள்

நசீராவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. கையில் இருந்த மொபைலை பார்த்துக் கொண்டே அவள் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. தங்கையின் தொலைபேசி அழைப்பு வந்ததிலிருந்து அவள் மனம் ஒரு நிலையில் இல்லை . அவள் திருமணம் முடித்து வந்த நாளிலிருந்து இதே போல் தான் வீட்டில் இருந்து அழைப்பு வந்தாலும் வீட்டிற்கு போய் தாய் தந்தையை பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் அவளுக்கு கிடைப்பதில்லை. அவளது கணவனோ மாமியாரோ அதை விரும்புவதில்லை. இப்பொழுது எப்படியாவது சென்று தாயைப் பார்க்க வேண்டும் என்று அவள் மனம் தவித்தது. மாமியிடம் கேட்க பயம் கணவன் வீடு வரவும் ஒரு மணி இரண்டு மணி ஆகும். சிந்தனை செய்த நசீராவின் மனம் கடந்த காலத்தை நோக்கி நகர்ந்தது. உயர்தரம் படித்து முடித்ததிலிருந்து அவளுக்கு அவளுடைய தகப்பனார் வரன் பார்க்கத் தொடங்கி விட்டார்.

மேலே படிக்கவைக்க அவரிடம் போதிய வசதிகள் இருக்கவில்லை. இதை அறிந்த நசீராவும் எதற்கும் தயாராக தாய் தந்தை பேச்சைக்கேட்டே நடக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொண்டாள். அவளுடைய தாயும் ஒரு இருதய நோயாளி தந்தை கூலி வேலை செய்து அன்றாடம் குடும்பத்தைக் காப்பாற்றுபவர்.

ஒரு தங்கையும் தம்பியுமே அவளோடு கூட பிறந்தவர்கள். பல கஷ்டங்களுக்கு மத்தியில் அவளுடைய குடும்பம் வாழ்ந்து கொண்டிருந்தது. என்றாலும் மிகவும் பொறுப்பாக தன் தாயையும் கூட பிறந்தவர் களையும் நசீரா கவனித்துக் கொள்வாள். தாயின் பொறுப்புகள் அனைத்தும் அவளே ஏற்று செயதாள். அவளுக்கு திருமணப் பேச்சு நடைபெறுகின்றது என்பதை அறிந்ததும் கல்யாண தரகர் காதர் நானா ஒரு கல்யாணப் பேச்சை எடுத்துக் கொண்டு வந்தார். அவர்களை விட வசதியில் கூடியவர்கள் மாப்பிள்ளை தகப்பனோடு சொந்த கடை வைத்திருக்கிறார். வீடு வாசல் இருக்கிறது உங்கள் மகளை நன்றாக வைத்துப் பார்ப்பார்கள். பல கதைகளையும் கூறினார். ஆசையூட்டினார். காதர் நானா. உடனே பதிலை கொடுக்காமல் நசீராவின் தந்தை யோசித்து நான் முடிவை சொல்லுகின்றேன் என்று அவரை அனுப்பி வைத்தார். அவருக்குத் தெரிந்தவர்களிடம் விசாரிக்க வேண்டுமென அவர் மனம் சிந்தித்தது. கேட்டபோது மாப்பிள்ளை வீட்டின் இளையவர் சிறிது செல்லமாக வளர்ந்தபடியால் கொஞ்சம் விசாரித்து பார்த்து கொடுங்கள். தேவை இல்லாத சில பழக்க வழக்கங்கள் அவரிடம் காணப்படுவதாக கேள்விப்பட்டிருக்கின்றோம் என்று மட்டுமே கூறினார்கள். பொறாமைக்கும் சிலர் பல கதைகள் கூறுவார்கள். அதனால் கொஞ்சம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யோசித்து நாம் எமது கடமையை முடிக்க தானே வேண்டும் என்று நசீராவின் பெற்றோர் அவளை அவனுக்கு திருமணம் செய்து கொடுக்க முடிவெடுத்தார்கள். என்றாலும் நசீராவுக்கு சிறிது விருப்பம் குறைவு தங்களை விட மிகவும் வசதியில் கூடியவர்களிடம் சென்று வாழ்க்கைப்படுவது சிரமமாக இருக்குமோ என்று அவள் மனம் அஞ்சியது.

என்றாலும் தாய் தந்தையரின் பேச்சை மறுத்துப் பேசாத அவளால் எதுவும் கூற முடியவில்லை. நோயாளி ஆன தாய் அவளது தந்தை இருவரையும் பார்த்தே அவர்களின் பேச்சுக்கு எதிர்ப்பேச்சு பேசாமல் தலையாட்டினாள் நசீரா. அன்பிலும் பண்பிலும் ஒழுக்கத்திலும் குறையாது வளர்க்கப்பட்டவள். அழகிலும் குறைந்தவள் அல்ல. நம்மை விட செல்வத்தில் கூடியவர்கள் 'நம்மை தேடி வந்து பெண் கேட்கிறார்கள் என்றால் நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும். உங்களிடம் எந்தவிதமான சீதனமும் எதிர்பார்க்கவில்லை 'என்று தரகர் பலவாறு கூறி நசீராவின் தந்தையின் மனதை மாற்றி திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தார்.

ஏழ்மையில் வாழ்ந்தாலும் நசீராவின் குடும்பம் மிகவும் மரியாதையாகவே வாழ்ந்து வந்தது. 'உங்கள் மற்ற பிள்ளைகளின் கடமை களையும் மாப்பிள்ளையே பொறுப்பாக இருந்து செய்து முடித்து விடுவார், நீங்க ஒன்றுக்கும் கவலைப்படாதீங்க' என்று பலவாறு கூறினார். இறைவன் நாட்டம் ஒருவாறு நசீரா முனீர் திருமணம் நடந்து முடிந்தது. திருமணம் முடிந்த பின்னர் தான் நசீரா முனீரின் தேவையில்லாத பழக்க வழக்கங்களை அறிந்தாள். போதை பழக்கம் அவனிடம் நன்றாகவே இருந்தது. தேவையில்லாத சிநேகிதர்களின் சக வாசம் இப்படிப்பல.

'இறைவன் என்னை ஏன் இப்படி சோதிக்கிறானோ' என்று சில சமயம் தனிமையில் கண்ணீர் விட்டு அழுவாள். இரவில் நேரம் கழித்தே வீடு திரும்புவான். நேரத்தோடு வந்தால் அவன் நண்பர்களும் கூட வருவார்கள். வந்தார்கள் என்றால் போகவே இரவில் பல மணித்தியாலங்கள் கடக்கும். சில நேரங்களில் அவளுக்கு பயமாகக் கூட இருக்கும்.

மாமியிடம் இது பற்றி கூறினால்' நீ உன் வேலையைப்பார். அவர்கள் அவங்கட வேலையப் பாத்திட்டுப் போவாங்க' அவவின் செல்ல மகனைப் பற்றி எதுவும் கூறுவதை அவர் விரும்புவதில்லை. அந்த செல்லம் தான் அவனை இவ்வளவு தூரம் கொண்டு வந்துள்ளது. என்பது அவவுக்கு தெரியாது. இரண்டொரு முறை பொலிசாரால் கைது செய்து அழைத்து சென்ற போது நசீரா பதறிப் போனாள். அதன் பின் தான் தெரிய வந்தது முனீருக்கு போதை வியாபாரத்திலும் சம்பந்தமுண்டு என்பது. அவளுக்கு வாழ்க்கையே வெறுத்தது போலானது. இவ்விடயத்தை தாய் தந்தைக்கு சொல்லக்கூடாது கவலைப்படுவார்கள். என கூறாதிருந்த போதும் எப்படியோ அவர்களுக்கு விடயம் தெரிய அவள் தந்தை பதறியடித்துக் கொண்டு வந்தார்.

அவள் மாமியோ' 'அது சும்மா யாரோ கோபத்துக்கு சொல்லியிருக்கிறாங்க சம்பந்தி! காலையில வந்துருவான்.' நீங்க கவலப்படாமப் போங்க.' என சாதார ணமாக சொல்லும் போது தான் அவளுக்குப் புரிந்தது. இது எனக்குத் தான் புதுசாவும் பயமாவும் இருக்குது. ஆனா இது வழமையாக நடக்கும் ஒரு விடயம் போல என எண்ணி மிகவும் மனமுடைந்து போனாள்.

இவற்றை யோசிக்க யோசிக்க நசீராவின் மனம் என்ன செய்வதென்றே புரியவில்லை. அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிவாள். அவளுக்குப் புரிந்தது. முனீரின் செய்கை களில் எப்படியாவது மாற்றம் வர வேண்டுமென்றும் அவன் திருந்தி வாழ வேண்டுமென்றும் முனீருக்கு வறுமையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் அவளைப் பேசித் திருமணம் செய்து வைத்துள்ளார்கள். ஆனால் அவன் பழக்க வழக்கங்கள் மாறுவதாயில்லை.

அவரின் செல்ல மகனுக்கு எதுவுமே சொல்லக்கூடாது. அவனுடைய எந்த நடவடிக்கையையும் இவள் எதிர்க்க கூடாது அவரின் வேலை வெட்டிகள் முழுவதும் நசீராவே பொறுப்பாய் செய்ய வேண்டும். என்றாலும் பரவாயில்லை அவள் செய்து தானே ஆக வேண்டும். ஆனால் கணவரின் அன்பு பாசம் இவைகள் கிடைத்தால் மற்ற எதுவுமே அவளுக்குத் தேவையில்லை.

இப்பொழுது கூட தாயின் சுகவீனம் என்று தொலைபேசி அழைப்பு வந்தாலும் போய் பார்த்து வர அவளுக்கு அனுமதியில்லை திருமணம் முடிந்த அந்த ஓர் இரண்டு நாட்களே அவர்கள் இருவரும் கூட அமர்ந்து உண்டார்கள் . மற்ற நாட்களில் காலையில் சென்றால் பகலில் வந்து சாப்பிட்டு விட்டு செல்வான். பின்னர் பன்னிரண்டு, ஒரு மணி ஆகும். அவன் வீடு வந்து சேர கண்கள் ஒரு வகை தூக்க மயக்கத்தில் போல் எரிச்சலுடனே வீட்டுக்குள் நுழைவான். கதவை திறக்க சிறிது தாமதித்தாலும் 'என்னடி பெரிய மலைய பெரட்டிட்டு படுக்கிற மாதிரி ஒரு டீ போட்டு தா' என்று கட்டளை இட்டபடி அதை வாங்கி குடித்து விட்டு தூங்கி விடுவான்.

ஒரிருமுறை தாய் வீட்டுக்கு கூட்டிச் செல்லும்படி மிகவும் கெஞ்சி ஒரு முறை கூட்டி போய் இருந்து கையோடு கூட்டி வந்து விட்டான். மாமியாரிடம் இது பற்றி அவள் கூற 'நீ அங்க போனா அவனுக்கு இங்கே வேலை வெட்டி செய்றது யாரு எனக்கு டைமுக்கு மருந்து தாரது யாரு 'என்று நச்சரிக்கத் தொடங்கி விடுவார்.

மீண்டும் அவளுடைய போன் சத்தம் அவளை நினைவுகளில் இருந்து மீள வைத்தது. 'தாத்தா அவசரமாக வா! உம்மாவை ஆஸ்பத்திரில சேர்த்திருக்கிறோம் கட்டாயம் வா உன்னை கேட்டா.வர சொன்னா' என்று அவள் தங்கை தொலைபேசியில் கூறியதும் அவளால் நிலை கொள்ள முடியவில்லை இன்று எப்படியாவது போய் பார்க்கவே வேண்டும்என்று முடிவெடுத்தாள். அவளுக்கு தெரியும் தொலைபேசியில் போவதற்கு கேட்டாலும் அவன் தொலைபேசியில் பதில் கொடுக்க மாட்டான். 'அவங்க என்ன வெளிநாட்டிலா இருக்கிறாங்க போய் பாத்துட்டு வந்துடலாம் கொஞ்சம் பொறு' என்று எரிந்து விழுவான் சில வேளைகளில்.

அதனால் பொறுமையாக இருந்தாலும் அவன் வந்த பிறகு போகலாம் என்று கூறிக் கூப்பிட்டால் அவன் வருவான் அவளைக் கூட்டிக் கொண்டு போவான் என நம்ப முடியாது. நிலைகொள்ளாமல் தவித்த அவள் மனம் தாயாரை சுற்றியே வலம் வந்தது. ஆனால் இரண்டு முறை தங்கை அழைத்து கூறியதால் 'தாத்தா நான் மட்டும் ஹாஸ்பிடல்ல இருக்கிறேன் நீயும் வந்தால் துணைக்கு மாறி மாறி இருக்கலாம் சரியான வருத்தம் என்று இது தன் தாயின் நிலைமையை விளக்கியதால் மாமியாரிடம் கூறிவிட்டு 'மாமி அவர் வரும்வரை என்னால் பொறுக்க முடியாது வந்தா சொல்லுங்க. போன் பண்ணினன் ஆனா அவர் ஆன்சர் பண்ணல நான் போயிட்டு வரேன்'. உம்மாவுக்கு நல்லா சுகம் இல்லையாம் ஆஸ்பத்திரியில் சேர்த்து இருக்கிறார்களாம் ஏற்கனவே இரண்டு முறை இப்படி வந்து மிகவும் கஷ்டப்பட்டாங்களே! தெரியும் தானே' என்று கூறிவிட்டு புறப்பட்டாள்.

'இது என்னடி புதுப்பழக்கம் ஏன் உனக்கு நாளைக்கு போனா போதாதா? இல்ல முனீர் வரும் வரையில ஒனக்கு பொறுக்கேலாதா? மாமி கூறுவதை காதில் வாங்கிக்கொள்ள அவளுக்கு அவகாசம் இல்லை. ஏதோ ஒரு தைரியத்தில் புறப்பட்டு விட்டாள். வீதிக்கு வந்து ஒரு முச்சக்கர வண்டியை நிறுத்தி அதில் ஏறி நேராக வைத்தியசாலைக்கே சென்று



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விட்டாள். அங்கு அவளது தந்தை தங்கை இருவரும் தாயின் கட்டிலில் அழுகையுடன் காணப்பட்டனர். தந்தை அப்போதுதான் உணவு கொண்டு வந்திருந்தார் .நசீராவைக் கண்டதும் தங்கையின் அழுகை கூடியது. ஆக்சிஜன் குழாய் பொருத்தப்பட்ட நிலையில் தாய் கண் மூடி படுத்திருந்தார். 'இப்ப தான் வந்தேன். வாப்பா உம்மாக்கு எப்டி இருக்கு அவசரமா வரப் பாத்தேன் வாப்பா முடியல்ல.' எனக் கூறியதும் 'மகள் தனியாவா வந்தீங்க எங்க அவரு 'என்று கேட்க 'ஓவாப்பா இப்பதான் வந்தேன் தங்கச்சியை நீங்க கூட்டி போங்க நானும் உம்மாகிட்ட இருக்கிறேன். என்று கூறியதும் தான் தாமதம் 'என்னடி சொல்லாம கொள்ளாம வந்துட்டே உம்மா எனக்கு போன் பண்ணி சொன்னாங்க' என்று பின்னால் வந்து நின்று முனீர் கேட்கும் வரை அவள் எதிர் பாக்கவில்லை.

'உங்களுக்கு எத்தனை முறை கோலெடுத்தேன். ஆனால் நீங்கள் ஆன்சர் பண்ணவில்லை' நான் வேலையில் இருக்கும் போது எப்படி ஆன்சர் பண்ணுவது? கொஞ்சம் பொறுக்க இயலாதா? நான் வந்து விடுவேன் தானே'

'நீங்கள் வர நேரம் ஆகும் என்றுதான் நான் அவசரமாக வந்து விட்டேன்' தங்கச்சி இரண்டு மூன்று முறை கோல் அடித்தாள். அதனால் எனக்கு பதட்டமாக இருந்தது. நான் வந்து விட்டேன்' 'சரி உம்மாவை பார்த்துட்ட தானே, கௌம்பு ' என்று முனீர் கூற 'இல்லை உம்மாவ இரண்டு மூன்று நாள் நிப்பாட்ட சொல்லி இருக்காங்க தங்கச்சிக்கு தனியா மூணு நாளும் நிக்க இயலாது நான் இந்த இரவு இருந்து காலையில வீட்டுக்கு வரேன்' என்று சொன்னாள் நசீரா 'அது எல்லாம் எனக்கு தெரியாது இப்ப கிளம்புறியா என்ன செய்ற' என்று அவன் குரல் உயர்ந்தது. 'மகன் இது ஆஸ்பத்திரி கொஞ்சம் மெதுவா பேசுங்க. நோயாளிகள் இருக்கிற இடம்.' என்று அவளுடைய

# மகனை விற்ற தாயானவள்

வயது முதிர்ந்து வற்றிய தோலுடனே
வயிற்றுப் பசியுடன் நீ வாயடை த்து நிற்கின்றாய்
வாழ்வு முடிந்து விட காலம் இன்னும் இருக்கின்றது
வார்த்தை இன்றி தவிக்கின்றேன் உள்மன வேதனையில்.
காதலுடன் வாழ்ந்த சுகமான வாழ்க்கை அது
கனவாகிப் போனதற்கு அம்மா உன்
வறட்டு கௌரவமும் வறுமையுமே காரணமாய்
வற்றிப் போன கண்ணீரை மீண்டும் நிறை க்கிறது.
நினைத்துப் பார்க்கின்றேன் என் நிலா அவள் தனையே
நிறைவான துணை உடனே சொகுசாக வாழ்கின்றாள்
தாயுந்தன் வார்த்தை தனை தட்டாத பிள்ளையாக
தலையை ஆட்டி விட்டேன் சுயநினைவு அற்றவனாய்.
தந்தையை இழந்து நின்ற குடும்பம் உந்தன் துணிவு
தொடர்ந்ததினால்
படித்து முடித்து விட்டேன்
பட்டமும் பல வாங்கி விட்டேன்
பண்பாக உயர்தொழிலில் பாங்காக நிற்கின்றே ன்.
ஆசை தான் யாரை விட்ட து.நீயும்
ஆ.. வெ ன்று வாய் திறந்தாய் காரைக் கண்டு
ஆ.. னதுவே உன் வாழ்வு வே தனை யில்
ஆ.. வாக துடிக்கின்றேன் வாழ்க்கையிலே .
வாவென்று உனை அழைக்க முடியவில்லை
தாரத்தை தள்ளி வைக்கத் தெரியவில்லை
ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற மந்திரத்தை
தாயே நீதானே கற்றுத் தந்தாய்

அடகு வைத்தால் மீட்டிடலாம் என்னை நீயும்
அப்படியே விட்டுவிட்டாய் அருமை த் தாயே
அதனாலே எனக்கு இப்ப கண்கள் விளங்குதில்லை
ஏனென்றால் நீ உன் மகன் ஐ (ஏதீஏ) விற்று விட்டாய்.
காப்பகத்தில் பத்திரமாய் பார்த்துக்கொள்ள
காசு பணம் கட்டுகின்றேன் என்றாலும் நான்
கண்கள் இருந்தும் பார்வையற்று
கபோதியாய் நிற்பதுவும் உன்னால் தாயே .

**– பௌசியா கபூர்**

ரத்தான்குடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை கூறினார். 'நீ இங்க இருந்து என்ன செய்ய? மகள் போ' என்று நசீராவின் தநதை கூறினார். 'வீண் பிரச்சினை வேணாம். நீங்க போங்க எங்களால முடிந்தளவு நாங்க பாத்துக்கொள்றோம். 'என்று அவள் தந்தை கூறினார். சொன்னதும் அழுது கொண்டே திரும்பிப் பார்த்தவண்ணமாக செல்ல மனமின்றி புறப்பட்டாள் நசீரா.

வழிநெடுகிலும் அவளை திட்டிக் கொண்டே சென்றான் முனீர் என்கிட்ட கேக்காம வாசல் தாண்டி எப்பிடி போவாய் இன்னைக்கு வீட்டில் போய் இருக்கிறது வா உனக்கு' என்று கூறிக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தவன் 'இதன் பிறகு என்னிடம் கேட்காமல் இங்கு நீ வாசல் தாண்ட கூடாது இப்படி செய்தால் அதுக்கு பிறகு நான் கெட்டவன் என்று சொல்லக்கூடாது ' என்றவனை ' இவர் மிகவும் பெரிய நல்லவர் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் நசீரா. அவள் மனம் அடைப்பது போல் இருந்தது. சாப்பிடக் கூட மனமில்லை. பேசாமல் அழுதவளாக படுக்கைக்கு சென்று விட்டாள். காலையில் அவன் எழுந்து கடைக்கு போகும் முன் மாமியிடம் வந்து 'மாமி இன்றைக்கு நான் உம்மாவ கொஞ்சம் பார்த்துட்டு வரணும். நேத்து போனதுக்கு அவ கண் முழிச்சிக் கூட பாக்க இல்ல பேசவும் இல்ல எனக்கு தூக்கமும் இல்லை இன்றைக்கு நான் போனால் தங்கச்சி வீட்டுக்கு வந்து கொஞ்சம் ரெஸ்ட் எடுப்பா'

'ஆ அது எல்லாம் தேவையில்லை. போறேண்டா உன் உடுப்பு எல்லாம் சுத்தி எடுத்துட்டே போ திரும்பி இந்த பக்கம் வரப்படாது'. என்று அவளை அதட்டினான் முனீர். நசீராவுக்கு இது புதுக்கதை இல்லை தாய் தந்தையை பார்க்க போக வேண்டும் என்றால் முனீர் கூறும் கதை இதுதான். ஆனால் இன்று ஒரு புது தைரியத்துடன் அதை ஏற்றுக் கொள்கிறாள். ஏனென்றால் அவள் இவ்வளவு நாளும் பொறுத்து பொறுத்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தது இந்த கொடுமையான வாழ்வில் இருந்து ஒரு விடுதலையை எண்ணித்தான்.

தாயும் தந்தையும் மாப்பிள்ளை திருந்தி வரலாம் நீ கொஞ்சம் பொறுமையா இரு!'. என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். ஏனென்றால் 'தங்கச்சியை ஒரு நல்ல இடத்தில நாங்க கொடுக்கணும். இந்த மாதிரி நாம ஏமாந்திடக்கூடாது மா'என்று அவளுக்கு ஆறுதல் கூறுவார்கள்' ஆனால் முனீரின் அட்டகாசம் கூடியதே தவிர ஒரு நாளும் குறைந்தபாடில்லை தங்கையின் வாழ்வுக்கு நான் ஒரு போதும் தடையாய் இருக்கப் போவதில்லை. என்று திடசங்கற்பம் அவள் மனதில் எழுந்தது .அது மட்டுமல்ல இந்த போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களை நம்பி என்னை போல் எத்தனை எளிய பெண்களின் வாழ்க்கையை இன்று பலியாகிக் கொண்டிருக்கின்றது என்பதை நினைக்க மனம் கலங்கியது. தீராத ஒரு மனப் பாரம் மட்டுமல்ல 'இறைவா என்னை மன்னித்து விடு இந்தக் கம்பியில்லா சிறை வாழ்வும் அன்பு, பாசம் எதுவுமேயற்ற இந்த பொய் வாழ்வொன்று எனக்குத் தேவை தானா? என்னால் இனியும் இதனுள் கிடந்து நானும் கலங்கி என் தாய் தந்தையரையும் நிம்மதியின்றி தவிக்க வைக்க நான் விரும்பவில்லை'. என்று எண்ணியவளாக தைரியத்தோடு தனக்கு ஒரு பாதை ஏன் நான் வகுத்துக் கொள்ளக் கூடாது.? விடுதலையை பெற அவள் மனம் தீர்மானித்தது.

மௌனமாக அதே நேரம் எதிர்பாராத அவள் முடிவை அதிர்ச்சியோடு நோக்கி னர் தாயும் மகனும். இறைவா எந்த பெண்ணுக்குமே இது போன்ற வாழ்க்கை அமையக்கூடாது. தன் மனைவியை அவள் உணர்வுகளை மதிக்கும் கணவன் எல்லாப் பெண்களுக்குமே வாழ்க்கைத் துணையாக அமைய வேண்டுமென அவள் மனம் பிரார்த்தித்துக் கொள்ளத், தன் வீடு நோக்கி நடந்தாள் நசீரா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாஃபியாக்களாய் உருவெடுக்கும் தொழில் துறைகள்

அன்றாட வாழ்வில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் மக்கள் நவீன பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறனர்.

இன்று மனிதத் தேவைகள் புதிய வடிவங்களில் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. அவசர உலகில் எத்தனையோ துன்பியல் நாடகங்களும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் ஆதி காலத்திலும் மக்களுக்கு ஏற்படும் துன்பங்களைத் தடுக்கவும் தவறுகளைத் எதிர்க்கவும் என குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன. அக்குழுக்களையே அன்று 'மாஃபியா' என்றனர்.

இன்று 'மாஃபியா' என்றால் 'ஒழுங்கமைக்கப்பட்ட சட்ட விரோதக் குற்றச் செயல்கள் புரியும் குழுக்கள்' எனக் கொள்ளப்படுகின்து. இன்று கப்பம் பெற்றுக் கொலை கொள்ளை, ஏமாற்று வேலைகள் ஆட்கடத்தல் போன்ற சகல கெட்ட செயல்களையும் செய்பவர்களாகக் காணப்படுகின்றனர். அன்று சிசிலி தீவில் ஆட்சி செய்த அந்நியரை 1815ல் இக்குழுக்களே விரட்டியடித்தன. அதே போல் சீனாவிலும் 17ம் நூற்றாண்டு தொடக்கம் 20ம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த ஆட்சியாளர்களை இக்குழுக்களே விரட்டியடித்தன. அங்கு 1950ல் மாவோசேதுங் ஆட்சிக்கு வந்ததும் இக்குழு வெளியேறியது. இவ்வாறு அரசியலில் ஆதிக்கம் செலுத்திய இக்குழுக்கள் காலப்போக்கில் போதைப் பொருள் விற்பனை ஆட்கடத்தல் போன்ற இன்னோரன்ன குற்றச் செயல்களிலும் ஈடுபடத் தொடங்கின.

ஹொங்கொங், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இக்குழுக்கள் போதைப் பொருள் விநியோகத்தில் மும்முரமாக ஈடுபட்டன. ஈரான் பாகிஸ்தான், ஆப்கானிஸ் தான் போன்ற நாடுகளில் இணைந்து ஹெரோயின் வணிகம் செய்தன. அமெரிக்காவில் 1920ல் மது விற்பனைக்கு அரசு இக்குழுக்களுக்கு அனுமதி வழங்கிய போது இக்குழுக்கள் புரிந்த குற்றச் செயல்களை அரசு கண்டு கொள்ளவில்லை என்றும் கூறப்படுகிறது.

இவ்வாறு உலகில் பல்வேறு துறைகளின் ஊடாக மக்களை ஆட்டிப் படைத்து உழைக்கும்வர்க்கமாக மாஃபியாக்கள் உருவெடுத்தன. எமது இலங்கைத் திருநாட்டிலும் உருவாகி அதன் திரு விளையாடல்களைச் செய்யத் தொடங்கின.

ஆரம்பகாலங்களில் சாராயம் அபின், கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் மாஃபியாக்களால் கையாளப்பட்டது. ஆனால் இன்று சமூகத்தில் நுண்கடன் வழங்குதல், மண் கடத்தல், மரம் வெட்டிக் காடழித்தல் மற்றும் உணவுப் பொருட்களைப் பதுக்குதல், என்பவற்றோடு புனிதமான கல்வித்துறையிலும் உயிர்காக்கும் மருத்துவத் துறையிலும் ஊடுருவித் 'தையத் தக்க'வெனக் களிநடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிவதை நாம் எல்லோரும் கண்டு கொண்டுதான் இருக்கின்றோம்.

கடந்த காலங்களில் கொரோனாவைக் காரணம் காட்டி அத்தியாவசியப் பொருட் களின் இறக்குமதிக்குத் தடைவிதித்துத் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டது. இதன் காரணமாக பொருள் விலையேற்றம் ஏற்பட்டது. இக்காலங்களில் குறிப்பிட்ட குழுக்கள் பொருள் இறக்குமதி செய்து அதிக விலைக்கு விற்று கொள்ளை இலாபம் கண்டது.

அது மட்டுமல்லாமல் நமது பிரதான உணவாகிய அரிசியினைப் பதுக்கி தட்டுப் பாடு ஏற்படுத்தி கொள்ளை இலாபம் பெறும் குழுக்கள் இன்னும் இயங்கிக் கொண்டு தான் உள்ளன. அதே போல விலங்குத் தீவனமாகப் பயன்படும் சோளம் (கோழித்தீன்) இறக்கு மதிக் குறைவினால் முட்டை கோழியிறைச்சி விலைகள் எகிறிக் கொண்டு ஏறுகின்றன.இது கூட மாஃபியாவின் வேலையாக இருக்க லாம். இது போலவே மஞ்சளின் விலை யேற்றம், கோதுமையின் விலையேற்றம் என அடுக்கிக் கொண்டே போகலாம்.

மேலும் எரிபொருள், பால்மா, போன்ற சகல இறக்குமதிப் பொருட்களுக்கும் தட்டுப் பாடும் விலையதிகரிப்பும் தவிர்க்க முடியாத விடயமாயிற்று. இங்கும் மாஃபியாதான் மறைந்துள்ளதோ என எண்ணிட தோன்றுகிறது!!

அடுத்து கடற்றொழிலிலும் மாஃபியா ஊடுருவி உள்ளதாகவும் அறியக்கிடக் கின்றது. யாழ்ப்பாணப் பகுதியில் கடலட்டைப் பண்ணைகள் 250க்கு மேற்பட்ட எண்ணிக்கையில் அமைக்கப் பட்டுள்ளன. அதில் 70மாத்திரமே கடற்றொழிலாளர்களுடையது என்று சொல்லப் படுகிறது. அது போலவே மண் கடத்தலிலும் அத்தியாவசியத் தேவைக்கென குறிப்பிட்டளவு மண் எடுக்க அனுமதி வழங்கி விட்டு கணக்கில்லாத அளவில் மண்ணை எடுத்துச் செல்வதைக் கண்டு கொள்ளாமல் இருப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது. இன்னும் உயிர் காக்கும் உத்தமத்துறையான மருத்துவத் துறையானது; இன்று மாபெரும் மாஃபியாவாகத் திகழ்கின்றது! அரச வைத்தியசாலைகளில் ஏற்கனவே பதிவு செய்தவர் பட்டியல் உள்ளதால் இப்போதைக்குச் சிகிச்சை இங்கு செய்ய முடியாது. சுணங்கும் என்றும் தனியார் வைத்தியசாலையில் அவசரமாக வைத்தியம் செய்ய வேண்டும் என்றும் உறுதியாகக் உரைத்திடுவர். பணத்துக்காக, உயிரோடு விளையாடி உயர்வான வாழ்வோடு உலகில் உலாவுகின்றனர்.! ஏழைகளிடமும் பணம் பறிக்கப் பல்வேறு வழிகளை நுட்பமாகக் கையாளுகின்றனர்! மனித விழுமியங்களை மறந்து உயிரோடு போராடுவோரின் உறவினர்களிடம் உள்ளதைக் கறந்திட முனைந்திடுவர்.

medical emergency எனக் கூறி இன்னொரு டெஸ்ட் செய்யவேண்டும் என்பர்! இந்த மருந்தையும் பாவித்துப் பார்ப்போம் என்பர்! இப்படியே அடுக்கிக் கொண்டு போனாலும் இன்னுயிரை எண்ணியே, உள்ளதெல்லாம் உருவிக் கொட்டி விட்டுக் காத்திருப்பர் உறவினர்கள்.

மருந்துக் கம்பெனிகளும் இணைந்து இத்துறையில் விளையாடுவர். இன்றைய மருந்துத் தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி அதிக விலைக்கு விற்றிடத் தந்திரம் செய்வர். இவருக்குரிய மருந்து ஒரு இடத்தில் மட்டுமே உள்ளது. நான் கேட்டால் தருவார்கள், ஆனால் செலவு அதிகமாகும் என்று கூறுதல், காலாவதித் திகதி முடிந்து விடும் நிலையிலுள்ள மருந்துகளை மலிவாக வாங்கிப் பாவனைக்கு விடுதல் போன்ற பல தந்திரங்களைக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவத்துறை மாபெரும் மாஃபியாவாகத் தொழிற்படுவதையும் நாம் அறியாமல் இல்லை.

அது போலவே கண் பரிசோதனை இலவசம் என்று கூறிக் கொண்டு கண்ணாடி விற்றலும் தந்திரமாக இடம் பெறுகின்றது.


அது மட்டுமல்ல, அறிவுக்கண் திறக்க வைக்கும் ஆசிரியர்களைக்கூட இன்றைய சமூகம் கொள்ளையடிக்கும் கும்பலாகக் கோடிட்டுக் காட்டுகிறது. இன்று ஒருசில ஆசிரியர்கள் பாடசாலையில் கற்பிப்பதை விட காசுக்காகக் கற்பிக்கும் டியூசனிலே ஒழுங்காகவும் திறமையாகவும் கற்பிப்பர். அதனால் காசு கட்டியாவது கற்றுக் கொள்வோம் என மாணவர் கூட்டம் படையெடுக்கும்.இலவசக்கல்வி பேரம் பேசப்படும்.

இவ்வாறு ஒவ்வொரு தொழில்துறைகளும் மாஃபியாக்களாய் உருவெடுக்கும் போது உண்மையில் உழைத்துக் களைத்து வாழும் ஏழைகளே அதிகம் பாதிக்கப் படுகின்றனர். என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும். இவ்வாறான செயற்பாடுகளால் சமூகத்தில் கொழுத்த செல்வமுடைய சிறு குழுக்களும் வறுமையில் வாடும் பெருங்கூட்டமும் உருவெடுக்கலாம். இதனால் நாட்டில் ஆரோக்கியமும் அறிவு விருத்தியும் முடங்கலாம்.

எனவே எல்லோரும் இந்நாட்டின் மன்னர்கள் எனும் ஜனநாயகக் கோட்பாடு மேலோங்கிட இந்த மாஃபியாக் கூட்டத்தின் ஆட்டம் அடக்கப்படுதல் வேண்டும் என்றால் மிகையாகாது!

கிண்ணியா -

**சபீனா பைசுல்லாஹ்**




# ஓராயிரம் பார்வையிலே

உயிர்வரை தீண்டிடும் உந்தன் பார்வை
உலகினில் அதுதான் எந்தன் போர்வை
கயல்விழி மொழிகளில் காணும் கூர்மை
காதலின் ஆழத்தை காட்டிடும் நேர்மை

பூவிழிப் பார்வையில் புன்னகை தேங்கும்
புதுப்புனல் போலவே புத்துணர்வு பொங்கும்
தீவிழி விழிக்கையில் தீப்பொறி மங்கும்
தீங்கினை செய்யவே தேகமும் அஞ்சும்

ஒற்றைப் பார்வையும் ஓராயிரம் பேசும்
உயிரினைத் தொட்டிடும் தென்றலாய் வீசும்
மற்றவை மறந்திடச் செய்திடும் நேசம்
மைவிழிப் பார்வையோ மந்திரத் தேசம்..

**சுஸானா முனாஸ்**
மூதூர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை அரசியலில் முஸ்லிம் பெண்களின் பங்கு

இலங்கை அரசியலில் முஸ்லிம் பெண்களின் பங்களிப்பு அளப்பரியது. முஸ்லிம் பெண்கள் சிந்தனைத்துறையிலும் சரி ஏனைய துறைகளிலும் சரி கால் பதித்து வருவது மகிழ்ச்சியான விடயமாக இருந்தப்போதும், மதரீதியாக வேறுபடுத்தப்படுவது கவலைக்குரிய விடயமாகும். முஸ்லிம் பெண்களுக்கு ஒழுக்கம், கல்வி ஆண்பெண் அந்தஸ்து, தொழில்வாய்ப்பு முதலியவைகளில் இஸ்லாம் காட்டும் முன்மாதிரியினை ஊன்றி கவனிக்க வேண்டிய விடயமாகவும் இருக்கிறது.

இருப்பினும், அரசியலில் முஸ்லிம் பெண்களின் பங்களிப்புகள் குறை வாகவே இருந்து வருகின்றன. பிரதி நிதித்துவம் மற்றும் பங்கேற்பு மிகமிக பின்தங்கியிருக்கும் நிலையில் எமது முஸ்லிம் பெண்களின் நிலை இன்னுமொரு படி பின்னால் உள்ளது.

இது இலங்கையில் மாத்திரமல்ல ஏனைய நாடுகளிலும் இவ்வாறே காணக்கூடியதாக இருக்கிறது. ஜனநாயகம் மற்றும் பெண் தலைமைத்துவத்தை விரும்பாது அதனை புறக்கணிப்பதன் பிரதிபலனாக இவ்வாறு ஏற்பட்டுள்ளது என்றும் கூறலாம்.

இன்றைய காலக்கட்டத்தில், எல்லாத் துறைகளிலும் முஸ்லிம் பெண்களின் பங்களிப்பு உள்ளது. பெண்கள் தொழில் செய்து தமது குடும்ப வாழ்வாதா ரத்தை மேம்படுத்த அயராது பாடுபடு கின்றனர். அதனை ஆதரித்து பலனை தனதாக்கும் எம் சமூகம் அரசியலில் ஜனநாயகம் மற்றும் பெண் தலைமைத்துவ தொடர்பான விடயத்தில் அதிருப்தி அடைகின்றனர். காரணம் சட்டம் ஒழுங்கு, ஒழுக்கம், மகரம் பேணுதல் போன்ற மதரீதியான கொள்கைக்குள்ளிருந்து


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமது நியாயமான கருத்தை முன்வைத் திருப்பதை ஊன்றிக் கவனித்தால், மறுபுறம் சரியாகத்தானிருக்கிறது எனலாம். இருந்தப்போதும் பெண்களின் கலாசாரம், பாரம்பரியம் இன்னோரன்ன உரிமை கோஷம் முன்வைப்பது என்பது பெண்கள் அதிகாரத்தில் இருந்தால் மாத்திரமே பெண்கள் சார்பான பிரச்சினைகளை சரி செய்யலாம். முறையாக உரிமையோடு கையாண்டு பெற்றுக் கொள்ளலாம் என்பது உண்மையாகும்.

பெண்களின் திறமைகள் நாடு தழுவிய தாக இருந்தப்போதிலும் அத்துறையில் அவள் சிறந்து விளங்கினாலும் பெண்களின் இயல்பான தன்மையினையே தமக்கு சாதகமாக்கி பெண்களை முடக்கி வாழ நிர்ப்பந்திக்கின்றனர்.

பொதுவாக இலங்கை அரசியலில் பெண்களுக்கு எதிராக பாரபட்சங்களை அகற்றி சமமான அரசியல் பங்கேற்பு ஐக்கிய நாடுகளில் ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டுள்ளப்போதும் முஸ்லிம் பெண்கள் அரசியலில் பங்கேற்பது என்பது குறைவாகவே இருந்து வருகிறது. பொதுவாகவே முஸ்லிம் பெண்கள் புனித மார்க்கத்தில் தன்னை உட்புகுத்தி யிருப்பதனால் அரசியலில் விலகி இருப் பதும் காரணமாகவும் இருக்கின்றது.

இலங்கை சனநாயக சோசலிச குடிய ரசின் பாராளுமன்றத்தில் பெண்கள்

பிரதிநிதித்துவம்-5.8%<br>
மாகாண சபைகளில்--0%<br>
உள்ளூர் அதிகார சபைகளில்--1.9%

இவ்வாறு பட்டியலிடபட்டிருந்தாலும் அரசியல் கட்சிகளின் முகவர்களாக பெண் களின் பங்களிப்பு இருந்து வருகிறது. பொதுவாக பெண்களின் சார்பாக பெண் களின் உரிமை மீட்டல், பொதுத் தேவைப் பாடுகளையும் இனனோரன்ன விடயங் களில் குரல்கொடுத்து மீட்சி பெற பெண் களின் அரசியல் உரிமை இருந்தாக வேண்டும். முதல் பிரஜை ஆண்கள் என்ற உறுதியான எண்ணத்தை கொண்டுள்ள இந்நேரத் தில் பெண்களை ஓரங்கட்டுதல் ஏற்க முடியாதுள்ளது.பெண்கள் சம அந்தஸ்தைப் பெற்றாக வேண்டிய சூழ்நிலை உள்ளது.

இலங்கை அரசியலில் முஸ்லிம் பெண் களின் பங்களிப்பு முன்பிருந்தே தொடர்ந்து வந்துள்ளது. 1949 ஆம் ஆண்டு கொழும்பில் தேர்தலில் போட்டியிட்ட ஆயிஷா ரவூப் என்பவரே இலங்கை அரசியலில் ஈடுபட்ட முதலாவது முஸ்லிம் பெண்மணியாவார். அன்றே பெண்கள் ஓரங்கட்டும் நிலையிலும் ஒருசில பெண்கள் கீழ் மட்டத்தில் இருப்பதுமில்லாமல் தமது சார்பான விடயங்களை உள்ளடக்கிய உரிமைக்குரல் மேலோங்க வேண்டும்.நேரடி வேட்பாளர் என்று நியமிக்கும் நிலை உள்வாங்கப் பட வேண்டும்.

நம் நாட்டில் முஸ்லிம் பெண் பிரதிநிதித்து வம்மிகமிககுறைவாகஇருக்கிறது. காரணம் இலங்கை வாழும் பெண்கள் அரசியல் விழிப்புணர்வைக் கொண்டுள்ளனர். ஆனாலும் அரசியலிற்குள் நுழைவதற்குத் தயங்குகின்றனர். காரணங்கள் நிறையவே இருந்தப்போதும் அரசியல்வாதிகள் தொடர்பாக சமூகத்தில் நல்ல கருத்துக்கள் இல்லாமலாகிவிட்டது. அதனால் பெண்கள் அரசியலுக்குள் நுழைவதில் தயக்கம் காட்டுகின்றனர். அதிலும் முஸ்லிம் பெண்கள் எல்லாத் துறைகளிலும் ஆளுமை பெற்றிருந்தப்போதும் அரசியலில் ஈடுபாடு காட்டத் தயங்குவதோடு தன் சமூகம் சார்ந்த கருத்துக்கள் அவர்களை மேலும் ஒரு படி தூரமாக்குகின்றது. அத்தோடு அரசியலில் அதிகார கௌரவம் கிடைத்தாலும் பல சந்தர்ப்பங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனங்களால் தலைக்குனிவு ஏற்பட நேர்கிறது. தேசியம் காக்கவும் சமூகச் சீர்கேடுகளை நிவர்த்திக்கவும் புறப் படும் பெண்களுக்குத் அது திருப்பித் தாக்குகின்றது. வித்தியாசமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் படுவது முண்டு. அவை உண்மையாகவும் உண்மை யில்லாமலும் இருக்கலாம். ஆனால் முஸ்லிம் பெண்கள் அரசியலில் பங்கேற்பது என்பது குடும்ப உறவோடு அல்லது கணவரினது பங்களிப்பு இருந்தால் மட்டுமே பாரதூர மான விமர்சனங்களிலிருந்து தம்மை பாதுகாத்து தம்மை சார்ந்தோருக்கு உரிமைகளை பெற்றுக்கொடுக்க முடியும். என்ற ரீதியிலேயே இருக்கிறது.

இலங்கையில் முஸ்லிம் பெண்களின் அரசியல் பங்களிப்பு வெகு குறைவாகவே இருக்கிறது. கடந்த காலங்களில் இலங்கை அரசியலில் அங்கம் வகித்த முஸ்லிம் பெண்கள் ஒருசிலராவர். ஆயிஷா ரவுப், பேரியல் அஷ்ரப், அன்ஜான் உம்மா, பெரோஸா முஸம்மில், மரீனா ஆப்தீன் போன்றோர் ஆவார்கள்.

இவர்களுள், 1949 இல் ஆயிஷா ரவூப் கொழும்பு மாநகரசபைக்கு போட்டியிட்டு தெரிவானார். அத்தோடு, அவர் 1952இல் பிரதி மேயராகவும் தெரிவானார். முஸ்லிம் பெண்கள் கல்லூரியின் அதிபராகவும் அவர் கடமையாற்றி வந்த நிலையில் அவரின் அதிபர் பணியை மேற்கொள்வதற்காக அரசியலிலிருந்து ஒதுங்கினார்.

அஞ்சான் உம்மா 1999இல் மாகாண சபையின் முதல் முஸ்லிம் பெண்ணாக ஜே.வி.பி. சார்பில் தெரிவுசெய்யப் பட்டவர். அதன் பின்னர் 2000ஆம் ஆண்டு ஜே.வி.பியின் தேசிய பட்டியல் உறுப்பினராக நாடாளுமன்றத்துக்கு தெரி வானார். பின்னாளில் இவர், விமல் வீரவன்ச குழுவோடு சேர்ந்து ஜே.வி.பியிலிருந்து வெளியேறினார். பின்னர் 2012இல் அவர் ஐ.தே.கட்சியில் இணைந்து கொண்டார்.

தெஹிவளை - கல்கிஸ்ஸை மாநகர சபை உறுப்பினராகச் செயல்படும் தேசமான்ய கலாநிதி மரீனா ஆப்தீன் கடந்த லொக் டவுன் காலங்களில் தெஹிவளைப் பகுதி யிலுள்ள வருமானம் குறைந்த குடும்பங் களில் உள்ள சுமார் இருநூறு மாணவர் களுக்கு அப்பியாசக் கொப்பிகள், வறிய குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் என்பவற்றை மாநகர சபை நிதியிலிருந்தும் தமது சொந்த நிதியிலிருந்தும் கொடுத்து உதவிகள் செய்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

தவிரவும் இவர்களுள், பெரோஸா முஸம்மில் சமூக சேவைகள் மூலம் மக்களுக்கு உதவி வந்த போதிலும், இவரால் பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளராக வெற்றியீட்ட முடியவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் விபத்தில் மரணமானதன் பின்னர் 2000 ஆண்டு பேரியல் அஷ்ரப் தேர்தலில் போட்டியிட்டு தெரிவானார். பின்னர் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். முஸ்லிம் காங்கிரஸின் இணைத்தலைவர் பதவியை சில காலம் வகித்தார். அஷ்ரப் அவர்களால் உருவாக்கப்பட்ட தேசிய ஐக்கிய கூட்டமைப்பின் தலைமைப் பதவியை வகித்ததும் குறிப்பிடத் தக்கது. அதன் பின்னர் சிங்கப்பூருக்கான தூதுவராக இவர் நியமிக்கப்பட்டார். இன்றைய நடைமுறை அரசியலில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அப்பால் முஸ்லிம் பெண்களின் வகிபாகம் முற்றுமுழுதாகக் குறைந்தே போயுள்ளது என்ற கசப்பான உண்மை வேதனை தருவதாக உள்ளது.

**எஸ்.யூ.கமர்ஜான்பீபி** (J.p)
வத்தளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சுக்குள் ஒரு நதி



**ஹஸனியா இர்ஃபான்**
தர்கா நகர்.

ராஹிலாவின் செல்போன் சிணுங்கிய போது அதை எடுக்க ஓடத்தான் அவளது கால்கள் பரபரத்தன. ஏனெனில் வெளிநாட்டில் இருக்கும் அவளது கணவன் கோல் எடுக்கும் நேரம் இது. மாலை மூன்று மணி.அவள் ஓய்வாக இருப்பாள் என்று அவன் எண்ணியிருக்கக் கூடும். ஆனால் ராஹிலாவுக்கோ வேலையும் முடிந்திருக்க வில்லை அவள பகல் சாப்பிட்டும் இருக்க வில்லை.'எல்லாம் கழுவி கிச்சன கிளீன் பண்ணிட்டு சாப்பிடு' என்று மாமி சொன்ன பிறகு அவளால் என்னதான் செய்ய முடியும்?

தொலைபேசியை எடுத்த ராஹிலா வின் மாமி சுபைதா 'அஸ்ஸலாமு அலைக்கும் மகன் சுகமா?' என்று கேட்டாள். அவன் ராஹிலாவைக் கேட்டிருக்க வேண்டும். 'ஓ... அவளா? சாப்பிட்டுட்டு ரூம்ல தூங்கி ரெஸ்ட் எடுக்கிறாளாக்கும். நான் இங்க கிச்சன்ல சாகுறன். நீங்க கோல் பண்ணுவீங்க என்ற எண்ணம் சரி அதுக்கு இருக்க வேணாம்' வாய் கூசாமல் பொய் பேசும் தனது மாமியை விழி விரியப் பார்த்தாள் ராஹிலா. கைகளை முந்தானையில் துடைத்தவாறு 'மாமி....மாமி...' என்று அழைத்துக் கொண்டு ஓடி வந்தாள் ராஹிலா.

அவளைக் கண்டதும் 'ஆ..மகன் ராஹிலா வந்துட்டா அவளோடு பேசுங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தொலைபேசியை அவளது கையில் திணித்தாள் சுபைதா. 'ஹலோ' மெல்லிய அவளது குரலைக் கேட்டதும் 'என்ன தங்கம் டயர்ட்ல தூங்கிட்டீங்க போல'என்ற தனது கணவன் ரிசானின் குரல் கேட்டதும் அவளது கண்களில் நீர் துளிர்த்தது. காதைத் தீட்டிக் கொண்டு அமர்ந்திருக்கும் மாமியை ஒரு கண் பார்த்தவாறு 'இல்ல ரூம்ல கொஞ்சம் வேல இருந்த கிளீன் பண்ணிட்டு இருந்தேன் 'மெல்ல சொன்னாள். 'ராஹிலா தையல் கோர்ஸ் போகனும்னு சொன்னீங்களே அதுல சேர்ந்துட்டீங்களா?' விசாரித்தான் ரிசான். 'மகாராணி ஊர் சுத்திட்டு வருவா. இங்க வேல எல்லாம் யார் செய்றது. ஒரு மண்ணாங்கட்டிக் கோர்ஸூம் தேவை யில்லை' என்று மாமி தடை விதித்ததை அவளால் சொல்ல முடியுமா?

'இல்ல அதுல ஆட்கள் புல் ஆகிட்டாங்களாம் அடுத்த பெட்ச் தொடங்கும் போது சேரனும்' ஏதோ சொல்லி சமாளித்தாள் அவள். 'ராஹிலா உடம்ப நல்லாபார்த்துக்கோங்க.எதுவேணும்னாலும் உம்மாகிட்ட வாங்கிக் கேளுங்க. ஹெப்பியா இரிங்க. இன்னும் வன் மன்த்ல நான் வந்திடுவன்' அவன் சொல்வதற்கெல்லாம் ம் கொட்டினாள் அவள். ஒரு இங்கிதம் இல்லாமல் கணவன் மனைவி பேசுவதை ஒட்டுக் கேட்கும் மாமி முன்னால் அவளால் ரொமாண்டிக்காக பேசவா முடியும்? 'ஏய்... ராஹிலா எல்லாத்துக்கும் ம்..ம்.. தானா?இருக்கட்டும் அந்த ம் கொட்டுற வாய என்ன செய்றன் பாரு. இன்னும் ஒரு மாதம் தான் 'கணவன் சொன்னதைக் கேட்டு அவளது முகம் ரத்தமெனச் சிவந்தது. 'எங்க எனக்கு ஒரு கிப்டும் இல்லயா?'அவன் கேட்ட போது ராஹிலா திக்குமுக்காடிப் போனாள்.'போடி நீ தராட்டி இதோ நான் தாறன் இச்.... இச்... இச்...' வெட்கத்தில் முகம் சிவக்க எங்கே மாமிக்கு கேட்டு விடுமோ என்ற தவிப்பில் கிச்சனை நோக்கி ஓடினாள் ராஹிலா.

தொலைபேசி கட்டானதும் ஒரு கணம் விம்மி அழுதுவிட்டாள் அவள். ரிசானுக்கு மூன்று சகோதரிகள். ஒவ்வொரு வருக்கும் தனித்தனியாக வீடு கட்டி திருமணம் செய்து கொடுத்திருந்த போதிலும் அவர்கள் மாதத்தில் பாதி நாட்கள் இங்குதான் இருப்பார்கள். ஒழுக்கமின்றி நல்ல பழக்கங்களின்றி வளர்ந்திருக்கும் பிள்ளைகள் செய்யும் அட்டூழியம் சொல்லுந் தரமன்று. அவர்கள் வந்து விட்டுப் போனதும் வீட்டைக் கிளீன் பண்ணுவதற்குள் அவளது இடுப்பெலும்பு முறிந்து போகும். ராஹிலா அவளது பெற்றோருக்கு ஒரே செல்லப் பிள்ளைதான். ஆனால் சொந்தக் கார், வீட்டோடு வர இருந்த பணக்கார மருமகளை வேண்டாம் என்று கூறி விட்டு ரிசான் ராஹிலாவைத்தான் மணமுடிப்பேன் என்று ஒற்றைக் காலில் நின்ற போது சுபைதாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்த வெறுப்பைத்தான் அவள் ராஹிலா மேல் காட்டிக் கொண்டிருந்தாள். ரிசானின் சகோதரிகள் கொஞ்சம் கறுப்பு குண்டாகவுமிருந்தனர். கொடி போன்ற உடலும் தங்க நிறத்திலும் பளபளத்த ராஹிலாவைக் கண்டு அவர்கள் பொறாமைத் தீயில் வெந்தனர்.

ரிசான் வெளிநாட்டுக்கு சென்று இத்துடன் ஐந்து வருடங்களாகின்றன. அவன் ஒவ்வொரு முறை ஊருக்கு வரத் தயாராகும் போதும் சுபைதா தனது மகள்களின் ஏதாவது ஒரு தேவையை இழுத்து வைத்து அவனை வர விடாமல் செய்திடுவாள். அவனது மூன்று சகோதரி களும் அவனை அட்டை போல் உறிஞ்சிக் கொண்டிருந்தனர். சுபைதாவுக்கு மகன் உழைத்து ஓடாய் தேய்கிறானே மனைவி யைப் பிரிந்து வாழ்கிறானே என்ற கவலையேதும் இல்லை. பணம் பணம் என்று பேயாக அலைந்தாள் அவள்.

தினமும் அதிகாலை நான்கு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மணிக்கே ராஹிலா எழும்பி விடுவாள். வாசிங் மெசின் வீட்டிலிருந்த போதிலும் அவள் கைகளில் தான் உடுப்புகளைக் கழுவுவாள். அதிலும் அவளது மதினிமார்களினதும் பிள்ளைகளின் உடுப்புகளையும் அவள் தான் துவைக்க வேண்டும். அன்று ஞாயிற்றுக் கிழமை காலை ஒன்பது மணிக்கே எல்லா மதினிமார்களும் பிள்ளைகளும் வீட்டுக்கு வந்து விட்டனர். பிரியாணி சமைக்க வேண்டும் என்பது அன்றைய ஓடர். ராஹிலா கிச்சனில் பம்பரமாக சுழன்று கொண்டிருந்தாள். பேரன் முட்டைக் கட்லட் கேட்டான் என்று மாலைச் சிற்றுண்டிக்கு அதைச் செய்யுமாறு வேறு சுபைதா ஓடர் பண்ணியிருந்தாள்.

ராஹிலா உட்கார நேரமின்றி களைப்புடன் வேலை செய்து கொண்டிருந்தாள். சுபைதாவுக்கு சுகர், பிரசர், கொலொஸ்ட்ரோல் என்று எல்லாம் இருந்த போதும் அவள் எப்போதும் வாய் கட்டியது இல்லை. இஷ்டத்துக்கு எல்லாம் சாப்பிடுவாள். அன்றும் டைனிங் டேபிளில் எல்லோரும் பிரியாணியை ஒரு வெட்டு வெட்டிக் கொண்டிருந்தனர். ராஹிலா அவர்கள் கேட்டதைக் கொடுக்க கிச்சனுக்கும் டைனிங் டேபிளுக்கும் ஓடிக் கொண்டிருந்தாள்.

அப்போது திடீரென மயங்கிச் சரிந்தாள் சுபைதா. எல்லோரும் பதறித் துடித்தனர். ராஹிலாதான் தைரியமாகச் செயல்பட்டாள். சுகர் அளவு நானூறைத் தாண்டியிருந்தது. ராஹிலா அம்பியூலன்ஸுக்கு கோல் பண்ணினாள். அம்பியூலன்ஸ் வந்த போது சுபைதாவுடன் ஏறிச் செல்ல மதினிமார் யாரும் முன் வரவில்லை. ராஹிலா பாய்ந்து ஏறிக் கொண்டாள். அம்பியூலன்ஸ் ஹொஸ்பிடலை நோக்கிப் பறந்தது. அங்கு ஐ சீ யூவில் எட்மிட் பண்ணிவிட்டு அறைவாசலில் குறுக்கும் நெடுக்குமாக



## பார்வையொன்றே போதுமே

பார்வையொன்றே போதுமே
உன் பக்கம் நான் நகர்வேனே

குட்டி போட்ட பூனை போல..
உன்னைச் சுற்றி வருவேனே..

சத்தியமாக சொல்லுறேன்
உன் சொல்லுக்குள் நான் இருப்பேனே..

சந்தனம் பூசிய மேனி போல
வாசனையோடு நான் இருப்பேனே..

உன் விழி பார்த்த தருணத்தில்
மெய் மறந்து கிடப்பேனே..

உன்னைக் காணாத பொழுதெல்லாம்
உன் நகல் பார்த்து இருப்பேனே..

நீ பேசாத நேரத்தில்
நீ பேசிய குறுஞ்செய்தி கேட்பேனே..

உன் அன்பின் உருவத்தை
மீண்டும் நான் இரசிப்பேனே..

யாழ் றமீஸா யாசீன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிஞர்களின் அறிவுரைகள்

1. தீமைகள் வளர்ந்து நிற்பதற்குக் காரணம், நல்லவர்கள் அவற்றைக் கண்டு கொள்ளாமல் இருப்பது தான்.

- எட்மண்ட் பர்க்

2. ஈகோ என்பது நம் முட்டாள்தனத்துக்குப் போட்டுக் கொள்ளும் மயக்க மருந்து.

- நியூட் ரோக்னே

3. ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களே ஒழிய, தம்மை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை.

- லியோ டால்ஸ்டாய்

4. எல்லோரிடமும் இணக்கமாக இருங்கள். ஆனால், உங்கள் நம்பிக்கையைப் பெற்றவர்களிடம் மட்டும் நெருக்கமாக இருங்கள்.

- ஜார்ஜ் வாஷிங்டன்

5. தேவையற்ற பொருட்களை நீ வாங்கிக் கொண்டே இருந்தால் சீக்கிரத்தில் உனக்குத் தேவையான பொருட்களை விற்க வேண்டியிருக்கும்.

- வாரன் பஃபெட்

6. ஒரு புழுவைக் கூட படைக்க சக்தியற்ற மனிதன் கணக்கில்லா கடவுளரைப் படைத்துக் கொண்டே இருக்கிறான்.

- மாண்டெயின்

7. மனித சமுதாயம் தவிர மற்றபடி மிருகம், பட்சி, பூச்சி, ஐந்து முதலியவைகளில் வேறு எந்தப் பெண் ஜீவனாவது . ஆண்களுக்காகவே இருக்கிறோம் நாம் என்ற கருத்துடன்- நடையுடன் இருக்கிறதா என்று பாருங்கள். இது என்ன நியாயம்?

- தந்தை பெரியார்

**என்.எஸ். சதீகா றஸ்லி**
புத்தளம், றசூல் நகர்

பதற்றத்துடன் நடந்து கொண்டிருந்தாள் அவள்.

ஐசியூவிலிருந்து வெளிவந்த டாக்டர் 'சின்ன மைல்ட் அட்டாக் தான்.பயப்பட ஒன்றுமில்லை. சுகர், பிரசர் எல்லாம் ஹை லெவல்ல இருக்கு. இப்ப நோர்மல் வாட்டுக்கு மாத்திடுவாங்க.. ஆனால்... இரண்டு மூன்று நாள் ஹொஸ்பிட்டல்ல இருக்க வேண்டி வரும். அதோட டுவண்ட்டி போ அவர்ஸும் யாராவது அவங்க கூடவே இருக்கனும் 'டாக்டர் சொன்னதற் கெல்லாம் தலையாட்டினாள் அவள். அவளது தொலைபேசி சிணுங்கியது. எடுத்துக் காதில் வைத்தாள். மதினிதான் பேசினார் 'ராஹிலா மதினி உம்மாட அலுமாரித் திறப்பு எங்க இருக்கு '

'எதுக்கு மதினி திறப்பு '

'ஆ.. உம்மாவப் பார்க்க வார தென்டா சும்மாவா?ஆட்டோக்கு ஒரு கணக்கு செலவாகுமே. அதுதான் உம்மாட அலுமாரியால சல்லி எடுக்கிறதுக்குத்தான்'

ஹொஸ்பிட்டல்ல இருக்கிற உம்மாக்கு எப்படி இருக்கென்று கேட்கல்ல. பார்க்க வாரதுக்கு ஆட்டோக்கு சிலவாகும் என்று யோசிக்கிறார்கள். அவர்களை நினைத்து மனம் நொந்தாள் ராஹிலா.

அவளுக்கு திறப்பு வைத்திருக்கும் இடம் தெரிந்திருந்த போதிலும் சொல்வ தற்கு விரும்பவில்லை. 'இல்ல மதினி எனக்கு தெரியாது 'என்று சொல்லி விட்டாள். சுபைதாவை நோர்மல் வாட்டுக்கு மாற்றி விட்டார்கள். ஐந்து மணியானதும் மூன்று மதினிமாரும் ஒன்றாக வந்தனர்.

'வீட்டில எல்லாம் போட்டது போட்டபடி இருக்கு.நான் போய் வீட்ட ஒதுங்க வெச்சிட்டு மாமிக்கு தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமான் எல்லாம் எடுத்திட்டு காலைல வாறன். நைட் நீங்க யாரு சரி மாமிகிட்ட இருக்கிறீங்களா?' ராஹிலா கேட்ட போது மூவரும் பதறித் துடித்து விட்டனர். 'எனக்கு நைட் முழிச்சிருந்தா தல வலி வரும்' என்று மூத்த மதினியும் 'ஐயோ எனக்கு நைட் முழிச்சிருந்து பழக்கமில்ல. அதோட இடுப்பு வலி வேறு. அங்க ஒதுங்க வெக்கிறதுக்கு ஒன்னுமில்ல. சாப்பாடு மிஞ்சினதெல்லாம் நைட்டுக்கு சாப்பிட என்டு நாங்க எடுத்திட்டோம். வீட்டயும் பூட்டிட்டோம். பேசாம நீங்களே கிட்ட நில்லுங்க மதினி'அவர்கள் ஒரேயடியாக மறுத்து விட்டனர். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சுபைதா ஆயாசத்துடன் கண் களை மூடிக் கொண்டாள்.

'சரி மதினி நான் நிக்கிறேன்.நீங்க மாமிக்கு மரக்கறி சூப் கொண்டு வந்தா'

'ஐயோ அத எல்லாம் செய்றதுக்கு எங்க நேரம்.நான் கடைல இடியப்பமும் சொதியும் கொண்டு வந்த.அதக் குடுங்க' மதினிமார் சொன்னதைக் கேட்டு கோபம் தான் ஏற்பட்டது ராஹிலாவுக்கு. அப்போது ராஹிலாவின் தந்தை ஒரு கூடையோடு வந்தார். 'மகள் இதுல எல்லாம் மாமிக்கு தேவையான பத்தியச் சாப்பாடு இருக்கு. நீங்களும் பகல் சாப்பிடல்ல தானே. உங்களுக்கும் வேற உம்மா சோறு வச்சிருக்கா சாப்பிடுங்க. எதுக்கும் கவலப்படாதீங்க. தேவையான சாப்பாடு நானே டெய்லி கொண்டு வாரன்.' என்ற தனது தந்தையை நன்றியோடு நோக்கினாள் அவள்.

மூன்று நாட்கள் சுபைதாவை கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண் டாள் ராஹிலா. அவளது அக்கறையான கவனிப்பும் சரியான பத்திய உணவுகளும் சுபைதாவின் சுகர் ப்ரெஷரை வெகுவாகக் குறைத்தன. நான்காம்நாள்டாக்டர்டிக்கட் வெட்டியதும் ராஹிலா மதினிமார்களுக்கு கோல் பண்ணினாள். 'மதினி வீடு நாலு நாளாக பூட்டியிருந்ததால ஒரே தூசாக இருக்கும். மாமிய ஈவ்னிங் வீட்டுக்கு கூட்டிப் போகலாம் எனடு டாக்டர் சொல்லிட்டார். நீங்க வீட்ட கொஞ்சம் கிளீன் பண்றீங்களா?'

'ஐயோ... தூசி என்டா எனக்கு அலர்ஜி.உம்மாட ரூம மட்டும் கிளீன் பண்றன்.நீங்க வந்து வீட்ட கிளீன் பண்ணுங்க' பதறியபடி கூறினாள் அவள். 'ஆ... ஆ... சரி ஈவ்னிங் மாமியைக் கூட்டிக் கொண்டு போக மச்சான்ட வேன கொண்டு வாரா மதினி' ' இல்ல அவருக்கு ஹயர் ஒன்னு இருக்கண்டு சொன்னாரு வேற வாகனம் ஒன்றப் பாருங்க'

ராஹிலா மாலையில் மாமியை ஹொஸ்பிட்டலில் இருந்து டிஸ்ஜார்ஜ் செய்து வீட்டுக்கு கூட்டிச் சென்றாள். மாமி யின் தேவைகளைக் கவனித்து அறையில் தூங்க வைத்து விட்டு வீட்டை கிளீன் பண்ணத் துவங்கினாள். அன்று சாப்பிட்ட பாத்திரங்கள் எல்லாம் கழுவாமல் கிச்சனில் அப்படியே இருந்தன. ராஹிலா பம்பரமாகச் சுழன்று வேலைகளை செய்தாள். எல்லாம் முடிந்து மாமிக்கு இரவுச் சாப்பாட்டைக் கொடுத்து மருந்துகளையும் கொடுக்கும் போது ரிசானின் கோல் வந்தது. 'உம்மா... உம்மா... உங்களுக்கு இப்ப எப்படி சுகமா? இன்னும் ஐந்து நாள் தான். பொறுத்துக்கோங்கோ. ஓடி வந்திடுறன். நான் ராஹிலா இருக்கிற தைரியத்துலதான் இருக்கன். அவ உங்கள நல்லாப் பார்த்துக் கொள்றாளா?" ஓ மகன் ஒரு மகள் செய்ய தயங்குற வேலைகளை எல்லாம் அவ செய்றா. பாவம் எவ்வளவு பொறுமைசாலி. நீங்க கவலைப்படாதீங்க மகன் இந்தாங்க ராஹிலாவோடு பேசுங்க 'போனை ராஹிலா வின் கையில் கொடுத்தாள் சுபைதா.

'ராஹிலா என் தங்கம் உசுரு பறந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துடுறன். இன்னும் கொஞ்ச நாள் தான் உம்மாவ நல்லா பாத்துக்கோங்க'

'ஐஸ் வைக்காதீங்க கொஞ்சினது போதும். அவங்க எனக்கும் உம்மா மாதிரி தான் நான் பார்த்துக் கொள்றேன்' அவள் புன்னகையோடு கூறினாள்.

அடுத்த நாள் காலையில மதினி மார் கோல் பண்ணினர். சுபைதா தான் போனை எடுத்தாள். 'உம்மா மதினி கிட்ட சொல்லுங்க பிரியாணி சமைக்க சொல்லி. நாங்க எல்லாம் இப்ப கிளம்பி அங்க வாரம்' 'மகள் நான் சொல்றேன் என்று கோபித்துக் கொள்ள வேண்டாம். ராஹிலா பாவம் எத்தனை வேலை என்று தான் செய்வாள். வீட்டு வேலைகளும் தனியா தான் செய்றா.எனக்கு ஒரு வேலையும் செய்ய உட்ரா இல்ல. நீங்க எல்லாம் வீட்ல சமைச்சு சாப்பிட்டு ஈவினிங் வந்தா போதும்' சிறிது கடுமையாக சுபைதா கூறிய போது மறுபக்கம் சத்தமே இல்லாமல் போனது.

மாலையில் வந்த மதினிமார்களின் முகத்தில் மகிழ்ச்சியே இல்லை.' உம்மா தம்பி வார கிழமை வாரதானே இந்த லிஸ்ட்ட தம்பிக்கு அனுப்பனும்' என்று கூறிய அவர்களது கையில் இருந்த லிஸ்ட்டை பறித்து சுருட்டி வீசினாள் சுபைதா. 'மகள் நீங்கள் லிஸ்ட் அனுப்பல என்று அவன் உங்களுக்கு ஒன்றும் கொண்டு வராமல் இருக்கப் போறதில்ல. அவன் உங்களுக்கெல்லாம் செஞ்சி இருக்கிறது போதும். இப்ப சரி அவனை நிம்மதியா வாழ விடுங்க' கோபத்தில் சுபைதா கத்திய போது மதினிமார்கள் தலையை தொங்கப் போட்டுக் கொண்டனர். அன்று மாலையே அவர்கள் வீட்டுக்குச் சென்று விட்டனர்.

திங்கட்கிழமை இன்று தான் ரிசான் நாட்டுக்கு வருகிறான். வழமை போல் நான்கு மணிக்கே எழும்பி விட்ட ராஹிலா தனது கணவன் மாமிக்காகவும் குடும்பத்துக்காகவும் பிரார்த்தித்து கொண்டாள். அவளது நெஞ்சு படபடவென்று துடித்தது. எப்போதுதான் தனது கணவனை கண்ணால் காண்பது என்று அவள் ஆவலோடு இருந்தாள். என்ன வேலை செய்தாலும் வாசலில் ஒரு கண் வைத்திருந்தாள். சரியாக பதினொரு மணியளவில் ஒரு வேன் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. சற்று பூசினார் போன்ற உடலுடன் ஒரு ஆண் அழகனாக கம்பீர மாக நடந்து வரும் தனது கணவனை கண்டு மயங்கி நின்றாள் ராஹிலா. தாயின் அறைக்குள் ஓடிச் சென்ற ரிசான் தனது தாயின் கை, கால், நெற்றி எல்லாம் தடவி முத்தமிட்டான். 'உங்களையெல்லாம் எப்போ கண்ணால பார்ப்போம் என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். இன்னிக்கு நான் ரொம்ப ஹேப்பியா இருக்கேன் உம்மா' அவன் தாயை அணைத்துக் கொண்டான்.

அறை வாசலில் தயங்கி நிற்கும் ராஹிலாவை அருகே செய்கை செய்து அழைத்தாள் சுபைதா. தங்கப்பதுமை என அன்ன நடை நடந்து வரும் தனது மனைவியின் அழகில் கிறங்கிய ரிசான் கண்ணடித்து சிரித்தான். ராஹிலாவின் முகம் குங்குமப்பூ போல் சிவந்தது. ஓடிவந்து அவனை அணைத்து மார்பில் ஒண்டிக்கொண்ட ராஹிலா விம்மி அழுது விட்டாள். 'பைத்தியம் ஏண்டி இப்ப அழுகிறாய் அதுதான் நான் வந்துட்டேன்ல' ராஹிலாவின் நெற்றியில் அன்போடு முத்த மிட்டவன் அவளது முதுகை வருடி ஆறுதல் படுத்தினான். 'உம்மா உங்க ஆசை மாதிரி இந்த முறை ஒரு கார் வாங்கிடலாம். நான் கார் வாங்க தயாராக வந்திருக்கேன்' ரிசான் சொன்னதை கேட்டதும் சுபைதா 'இல்ல மகன் அது ஒன்னும் வேணாம். இனி நீங்க வெளிநாட்டுக்கு போற எண்ணத்தையே கைவிட்டுடுங்க. நீங்க பட்ட கஷ்டம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எல்லாம் போதும் இப்பயாவது இரண்டு பேரும் சந்தோஷமாக சேர்ந்து வாழுங்க. நீங்க கொண்டுவந்து சல்லிய வச்சி இங்க ஒரு தொழிலை தொடங்குங்க. உங்கள பிரிஞ்சு பாவம் ராஹிலாவும் எவ்வளவு காலம் இருப்பாள். என்ன இன்னும் ஒரு பத்து மாசத்துல் என் கையில் ஒரு பேரனையோ பேத்தியையோ பெத்துக் கொடுத்திடுங்க அது போதும்' சுபைதா சொன்னதை கேட்ட ராஹிலா வெட்கத்தில் சிவந்த தனது முகத்தை ரிசானின் மார்பில் புதைத்துக் கொண்டாள். தனது தாயையும் ராஹிலாவையும் இரு கரங்களினால் சேர்த்தணைத்து ராஹிலாவை பார்த்து மந்தகாசமாக புன்னகை செய்தான் ரிசான்.

# அழகு ஒரு அவலட்சணம்


அகத்தின் பால் பட்டதுவே
அழகென்று சொல்லுகின்ற தோற்றம்!
தோற்றம் பேரழகாய்
இருந்தால் தீர்ந்ததுவோ?
சுவையெல்லாம்
பார்வைக்கு விருந்தானால்
தீர்ந்திடுமோ?

காண்போர் காணுகின்ற
பார்வைதான் கணக்கு!
கண்ணுக்கு மனத்தழகு
கண்ணாடி போல் தெரிய,
காலமெல்லாம்
அவ்வழகே அழகுக்கு அழகூட்டும்!
அகத்தழகு இல்லாமல்
முகத்தழகு இருந்துவிட்டால்
அவ்வழகே அழகுக்கு
இழுக்காகும் அறிவீர்!

அவ்விடத்தில் தானே
நாம் சொல்வோம்
இந்த 'அழகு ஒரு அவலட்சணம்!'
அழுக்கற்ற மனம் இருப்பின்
அது லட்சணம்' என்று

அரைகுறை ஆடையுடன்
அங்கம் தெரிய மங்கையர் உலவுவது
அழகென்று நினைப்பதும் பலருக்கும்
அது அழகு ஒரு அவலட்சணமே..

- ஷாமென் நிஸாம்டீன்
உபதலைவி - Srilanka Pen club)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரத்துப் பாடல்கள்

இது ஒரு புத்தாக்க முயற்சி. இந்த புத்தாக்கத்தை எமது Srilanka pen club தலைவி சம்மாந்துறை மஷூறா அறிமுகம் செய்திருக்கிறார். மாதத்தின் மூன்றாவது செவ்வாய்களில் புலனம் நிகழ்ச்சியில் வளர்ந்து கொண்டிருக்கிறது. தயாரிப்பாளராக கம்பளை அஸ்மா தீனும் நெறியாளராக சுமையா சத்தாரும் செயற்பட்டு வருகிறார்கள்.

- ☐ முதல் வரியில நான்கு சொற்கள்.
- ☐ இரண்டாம் வரியில இரண்டு சொற்கள் இடைவிட்ட கோடு ஒருசொல்
- ☐ மூன்றாம் வரியில் நான்கு சொற்கள்
- ☐ நான்காம் வரியில் இரண்டு சொற்கள்.
- ☐ பாடலில் கிண்டலிருக்க வேண்டியது அவசியம்.கருப்பொருள் ஒரு சமூக பிரச்சினையை சுட்டிக்காட்டுவதாக அமைய வேண்டும்.ஒட்டுச் சொற்கள் தனிச் சொற்களாகா.ஆங்கில சொற்கள் இடம்பெறலாம்.

## பாடல் 1

ஆண்.
ரியூஷன் போற அழகு மானே
திரும்பிப் பாரடி - உந்தன்
பின்னால் அலையும் பித்த னானேன்
வாயத் திறவடி.


பெண்.
ஹீரோ ஹொண்டா ஓடு கின்ற
அழகு சிங்கமே - உங்க
விலையச் சொன்னா தோது பார்த்து
வாங்கப் பார்க்கிறேன்.

– சம்மாந்துறை மஷூறா

பெண் :-
கச்சான் கொட்ட வாங்கி வாங்க
அவிச்சி தாரேனே - மச்சான்
பைக் எடுத்து சந்திப் பக்கம்
போயிட்டு வாங்க.

ஆண்:-
பெற்றோல் வில கூடிப் போச்சு
செல்ல பொண்டாட்டி - உன்ட
அப்பன் சொத்து வித்து கொஞ்சம்
காசு பாருடி.

– தம்பாலை ஜுவைரியா



ஆண் :-
ஒட்டடக் குச்சி போல நீயும்
மெலிந்திருப்பது - ஏனடி
வீசும் காற்றின் வேகத்தில் நீ
பறக்க மாட்டாயோ

பெண் :-
குண்டா இருந்தால் யாரு மச்சான்
இப்போ பாக்குறா - எல்லாம்
சிம்ரன் மாதிரி பொண்ணுக்குத் தானே
லைன்ல நிக்கிறான்

– சதீகா றஸ்லி

மச்சி
வெள்ளை சாரன் சேட்டு போட்டு வெளியில் திரியும் நீ.
உன் வீட்டுக்குத்தானே இளக்கம் என்று யாருக்கும் தெரியல.

மோப்பம் பிடிக்கும் மூஞ்ச பாரு முழியும் சரியில்ல.
நீ முன்னால் போக பின்னால் வர எனக்கு பிடிக்கல.

மச்சான்
எதிர் உடுப்பு கொசுவம் வெச்சி புடவை உடுக்கும் நீ.
நீ வாய் திறந்தா வங்காளமே வெளில வருகுது.

ஒட்ட வீட்டு ஒழுங்கபக்கம் ஓடிப்போன நீ.
உனக்கு வாழ்க்க கொடுக்க வாரன் புள்ள வருத்தம் தேவல.

– ரமீஸ் நிசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் :
பதறி அடித்து நடந்து போகும்
அழகு தேவதை - கொஞ்சம்
திரும்பிப் பார்த்து என்ன ஏது
சொல்லிப் போயேன்டி

பெண் :
போடா எந்தன் கிரீம் பவுடரும்
வெயிலில் உருகிட்டு - என்
சொந்த நிறம் தெரிஞ்சி போனா
விரண்டு ஓடுவ.

– பாத்திமா ஹகீமா அமீனுதீன்

பெண் :
சூது வாது போதை எல்லாம்
மலிஞ்சி கிடக்குது - மச்சான்
பொழுது படுமுன் புகுந்த வீடு
வந்து சேருங்க

ஆண் :
பொறுக்கிப் பசங்க யாரும் எனக்கு
பிரண்ட்டு இல்லியே - பின்னே
பிதற்றிக் கொண்டு எதுக்கு நீயும்
துடிச்சிச் சாவுறே

– ஷபீனா இப்றாஹிம்

மனைவி
வீட்டுச் சாமான் ஒண்டும் இல்ல
அழகு மச்சானே - நீங்க
வீட்டுல தான் சும்மா இருந்தா
குடும்பம் விளங்குமா?

கணவன்
தொழில் ஒண்டும் வருது இல்ல
நானும் என் செய்ய
விலை வாசி ஏறிப் போச்சு
பொழப்பு சரியில்ல

– எம். எஸ். றஸ்மியா

# சமையலறைக் குறிப்புகள்

**டிப்ஸ் 1 :**

அசைவம் சமைத்த பிறகு பார்த்தால் நம் வீட்டு சமையல் மேடை சிங்கில் இருந்து கெட்ட வாடை வீசிக்கொண்டே இருக்கும். இது போன்ற கெட்ட வாடை வராமல் தடுக்க, எல்லா இடத்திலும் முதலில் ஒரு சிறிய துண்டு புளியை வைத்து நன்றாக தேய்த்து விடுங்கள். அதன் பின்பு, வாசம் நிறைந்த பாத்திரம் தேய்க்கும் லிக்விடை ஊற்றி கழுவி விட்டால் அசைவ வாடை உங்களுக்கு சுத்தமாக வராது.

**டிப்ஸ் 2 :**

வெல்லத்தை ( சக்கரை) துருவ வேண்டும் என்றால், காய்கறித் துருவலில் வைத்து துருவினால் சிரமம் இல்லாமல், சீக்கிரமே வெல்ல தூள் நமக்கு கிடைக்கும்.

**டிப்ஸ் 3 :**

வெயில் காலத்தில் தயிர் சீக்கிரம் புளித்து போய்விடும். அப்படி, தயிர் புளிக்காமல் இருக்க அதில் நசுக்கிய இஞ்சி, ஒரு துண்டு தேங்காய் பத்தை இரண்டையும் தயிரில் போட்டு வைத்தால் தயிர் சீக்கிரம் புளித்து போகாது.

**டிப்ஸ் 4 :**

நெய் ரொம்ப நாளைக்கு கெட்டுப் போகாமல் இருக்க, நெய்யில் ஒரு சிறிய துண்டு வெல்லக்கட்டியை போட்டு வைத்தால் போதும்.

**டிப்ஸ் 5 :**

நீங்கள் வெங்காயம் நறுக்கும் போது,கத்தியை லேசாக சூடு செய்துவிட்டு அதன் பின்பு வெங்காயம் நறுக்கினால் கண்களில் தண்ணீர் வராது.

**டிப்ஸ் 6 :**

தக்காளிப் பழங்கள் பழுதடையாமல் இருக்க, வாங்கியவுடன் காய்ந்த துணி ஒன்றினால் ஈரமில்லாமல் துடைத்த பின் நியுஸ் பேப்பரில் ஒவ்வொரு பழத்தையும் சுற்றி வையுங்கள். ஒவ்வொரு பழமாக சமையலுக்குப் பயன்படுத்தலாம். குளிரூட்டியில் வைக்கத் தேவையில்லை.

ஜனாபா ஜனூன் கதிஜா அன்ஸார்
திருகோணமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"ஒப்புரவு ஒழுகு" என்பது ஆத்திச் சூடிக் கூற்று. அதாவது உலகம் எவ்வாறு நடை போடுகின்றதோ அதை அறிந்து அதனோடே தானும் நடைபோட வேண்டு மென்பது ஔவையாரின் வாக்கு. அதுவே இலகுவில் சமூகப் பொருத்தப்பாடு என்றும் கூறி விட முடியும். இருந்தபோதும் சமூகம் என்றால் என்ன என்று முதலில் நோக்குவோமாயின், தனித்துவமான பண்பாடு, நிறுவனம் சார்ந்த தொடர்புகள், ஒரே மாதிரியான நிலப்பகுதியில் வாழ்தல், ஒரே மொழியினைப் பேசுதல் போன்ற ஒற்றுமைகளைக் கொண்ட மக்கள் குழுவினை சமூகம் எனலாம். அந்த வகையில் தகவல் தொழில்நுட்ப சமூகம், அறிவுச்சமூகம் போன்ற சமூகங்களும் இன்று விரிவடைந்து வருகின்றன. அதே போல் பொருத்தப்பாடு என்றால் என்ன என்று நோக்குவோமாயின்,உடல், உள, சமூக, தனியாள் தொடர்பாடலினால் உருவாகக்கூடிய பல்வேறு நிலமைகளுக்கு ஏற்ப ஒழுகுதலே ஆகும். அதாவது உள்ளத்தில் எழுகின்ற பல்வேறு நிலமைகளுக்கு ஏற்ப ஒருவர் தன்னை பொருத்திக் கொள்வது பொருத்தப்பாடு ஆகும். ஆக சமூகப் பொருத்தப்பாடு என்றால் நாம் ஒன்றித்து வாழும் சமூகத்தோடு பொருந்தி வாழுதல் என்று இலகுவாக வரைவிலக்கணப் படுத்தலாம்.

"சம முகம்" என்பதே நிச்சயம் சமூகம் என்றாகியிருக்க வேண்டும். சம முகம் கொண்ட உறவுகளோடு கூடி சமமாக பகிர்ந்து வாழ்தல் தானே சமூகம் என்றாகிறது. சம+ஊகம் எனவும் கருத இடமிருக்கிறது. அனைவரின் ஊகங்களும் ஒற்றுமையாக இருப்பது எனவே கூடி வாழ்ந்து கோடி நன்மை பெறுவது எனலாம். இதனைத் தானே சமூகப் பொருத்தப்பாடும் எடுத்தியம்புகின்றது. ஏனெனில் சமூகத்தின் நிலையான இருப்பிற்கு பொருத்தப்பாடு என்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக காணப்படுகின்றது. சமூகம் என்பது உடல் எனில் பொருத்தப்பாடு என்பது உயிராகத் தான் இருக்க வேண்டும். ஏனென்றால் சமூகம் என்ற உடலின் இயக்கத்திற்கு பொருத்தப்பாடு என்ற உயிர் அத்தியாவசியமானது. உயிரில்லாத உடல் இயங்காதது போல பொருத்தப்பாடு இல்லாத சமூகமும் ஒருபோதும் இயங்கி முன்னேறாது.

அரசறிவியலில், சமூகம் என்பது மனிதத் தொடர்புகள் முழுமையையும் குறிக்கப் பயன்படுகிறது. சமூகவியல் போன்ற சமூக அறிவியல் துறைகளில், சமூகம் என்பது ஓரளவு மூடிய சமூக முறைமையை உரு வாக்கும் மக்கள் கூட்டத்தைக் குறிக்கும். இதில், பெரும்பாலான ஊடுதொடர்புகள் அதே கூட்டத்தைச் சேர்ந்தவர்களுடனேயே இடம்பெறுகின்றன. சமூகம் என்பது சில வேலைகளில் பண்பாடு என்பதிலிருந்து முரண் பட்டதாகக் கருதப்படுகிறது. எடுத்துக் காட்டாக, 'கிளிபர்ட் கீர்ட்ஸ்' என்பவர், சமூகம் என்பது சமூகத் தொடர்புகளின் உண்மையான ஒழுங்கமைவு என்றும், பண்பாடு என்பது நம்பிக்கைகளாலும், குறியீட்டு வடிவங்களாலும் ஆனது என்றும் குறிப்பிட்டார். 'ரிச்சார்ட் யெங்கின்சு' என்னும் சமூகவியலாளர், சமூகம் என்பது மனிதர் எதிர்கொள்ளும் பல்வேறு இருப்பியல் பிரச்சினைகளைக் கையாளுகிறது என்கிறார்.

அந்த வகையில் சமூகத்தின் நிலைமை களோடு ஒன்றித்துப் போதலே சமூகப் பொருத்தப்பாடு.

சமூகப் பொருத்தப்பாடு என்ற எண்ணக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவில் இரு விடயங்கள் பொதிந்துள்ளன. அதனையும் உணர வேண்டியது கட்டாயமாகும்.

1. சாதகமான பொருத்தப்பாடு.
2. பாதகமான பொருத்தப்பாடு.

"சாதகமான பொருத்தப்பாடு" என்பது சமூகத்தின் நிலையான இருப்பிற்கும், சமூக முன்னேற்றத்திற்கும், சமூகத்தின் படிமுறை வளர்ச்சிக்கும் ஏற்ற வகையில் சமூகத்தோடு பொருந்திப் போதல் ஆகும்.

"பாதகமான பொருத்தப்பாடு" என்பது சமூகத்தின் இருப்பை நிலைகுலையச் செய்யும் விடயங்களிலும், உயிராபத்து விளைவிக்கும் செயற்பாடுகளிலும், சமூகத்திற்கு எதிராக செயற்படும் குழுக்களோடு பொருந்திப் போதல் ஆகும்.

ஆக ஒரு தனியாளிற்கு சமூகத்தோடு சாதக பொருத்தப்பாடு எவ்வாறு அவசியமோ அது போல பாதக பொருத்தப்பாடு தவிர்த்துக் கொள்ள வேண்டியதோர் விடயமாகும்.

சமூகம் நன்னெறியில் ஒழுகும் சந்தர்ப்பங்களில் சமூகத்தோடு ஒன்றித்து போவதும், சமூகம் நன்னெறி தவறும் போது அதனை எதிர்த்து செயற்படுவதும் தனியாள் பங்காகும். அது போல சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கு மதிப்பளிக்காதவர்கள் சமூக எதிர்ப்பாளர்களாகப் பார்க்கப்படுகிறனர். கூடி வாழும் இயல்பு இல்லாதவனுக்குச் சமுதாய வாழ்வு சுகமாக இருக்காது. எனவே சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கு மதிப்பளித்து கூடிவாழும் போதுதான் சிறந்த சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும். ஒவ்வொரு தனி மனிதனும் சமூகப் பொருத்தப்பாட்டை தன்னகத்தே கொண்டு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்க முயற்சி செய்வோமாக...

ஆக்கமும் படமும்
பாத்திமா ஹகீமா அமீனுதீன்
ஓட்டமாவடி

## கலக்குது பாரு ஸ்டைலு...

ஆண்டவன் அளித்த
அழகான உடலிது
ஸ்டைல் என்னும் பெயரால்
ஏலம் விடுவதும் ஏன்தானோ

உயிர்பிரிந்த பின்னாலே
அழிந்திடும் அது தன்னாலே
அத்தனை ஸ்டைலும் காட்டியே
கலக்கி நீ திரிவதேன்

தடுக்கி விடும்படி இறுக்கமாய்
உன் உள்ளாடை அளவுகள் தெரியவும்
கலக்கித்தான் திரிவது ஆகுமா
ஸ்டைலுகள் சுவனத்தைச் சேர்க்குமா

சினிமாவும் சீரியலும் உன்னையே
சிக்கலாய் ஆக்கியே விட்டதால்
கலக்குது அதனது ஸ்டைலுகள்
கருத்திலே எடுக்கத்தான் மாட்டாயா

அடர்மிகு கூந்தலின் பின்னலும்
அழகிய தோட்டின் மினுங்கலும்
மெல்லிய துணியினால்
மறைப்பதால் முழு அழகுமே
மலிவாக விளங்குதே

நான்கு யார் துணியினைச் சுற்றுகிறாய்
நடு நெஞ்சிலே கைப்பிடியளவு போடுகிறாய்
கலக்குது கவர்ச்சிகள் மலிவாக
கணக்கிலே எடுக்காமல் திரிகிறாய்

கலக்கி நீ ஸ்டைலாய்த் திரிவது
கடைசியில் நரகமே சேர்த்திடும்
கண்ணிய நபிகள் சொன்னதை
காலின் கீழ் போட்டு மிதிப்பதா



தூக்கித்தான் போட்டிடு ஸ்டைலையே
எடுத்திடு இறையவன் வழியையே
அமர்த்துவான் சுவர்க்கத்தின் மீதிலே
அதுதானே வெற்றிக்கு வாசலே

உலகது நலனுக்காய்
வாழ்ந்திடில் உனக்குமே
உண்மையில் மிஞ்சுமே தோல்விதான்
இறையினைப் பின்பற்றி நடந்திட்டால்
இரு உலகிலும் தொடர்வது வெற்றிதான்.

முப்லிஹா பிர்தவ்ஸ்
காத்தான்குடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீட்டுத்தோட்டம்

மனிதனின் அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை, உறையுள் என்பன காணப்படுகின்றன. இந்த மூன்று அடிப்படைத் தேவைகளிலே உணவு முதலிடத்தை வகிக்கின்றது. ஒரு மனிதன் உழைப்பதன் பிரதான இலக்கானது உயிர் வாழ்வதற்கு தேவையான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கேயாகும். உணவின் பிரிவுகளை பல்வேறு வகைகளாக பிரிக்க முடியும். இருந்த போதிலும் இக்கட்டுரையின் கருப் பொருளுக்கமைய உணவினை இரண்டு வகைகளாக நோக்கலாம். அவை தாவர உணவு, விலங்குணவு என்பவையாகும். அந்த வகையில் தாவர உணவின் தேவைகளை நாம் மரம்,செடி, கொடி,கீரை வகைகள், கிழங்கு வகைகள் போன்றவற்றின் மூலம் நிறைவு செய்து கொள்கின்றோம்.

ஒவ்வொரு குடும்பங்களும் தத்தமது தாவர உணவுத்தேவைகளை வீட்டுத் தோட்டங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம். அந்த வகையில் வீட்டுத் தோட்டம் எனும் போது சுகாதாரமானதும் ஆரோக்கியமானதுமான உணவுகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் வீட்டுடன் இணைந்ததாக தோட்டங்களை அமைத்துப் பராமரித்து அதனூடாக தமது உணவுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதைக் குறிக்கின்றது. ஆரம்ப காலங்களைப் பொறுத்த மட்டில் சனத்தொகை குறைவு, கட்டடங்கள், வீடுகளின் அளவு குறைவு என்பதோடு நிலப்பரப்புகளும் அதிகம். ஆனால் இன்றைய கால கட்டமானது அவ்வாறான நிலைக்கு மாற்றமானது. அதிகரித்து வரும் சனத்தொகைக்கு ஏற்ப உணவுத்தேவையும் அதிகரித்து காணப் படுகின்றது. எனவே தான் வீட்டுத் தோட்டத்தின் தேவையும் அதிகமாக உணரப்படுகின்றது.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட கொரோனா தொற்றின் தாக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார நெருக்கடிகள் போன்றவற்றால் அனைவரும் வீட்டுக்குள்ளே முடங்கும் நிலை காணப்பட்டது. இவ்வாறான சூழ்நிலைகளிலே உணவுத் தேவை அதிகமாக காணப்படும். இப்படியான இடர்காலங்களை சமாளிக்க வீட்டுத்தோட்டத்தின் பயன் இன்றியமையாததாகும். இன்று புற்று நோய், சிறுநீரக நோய்கள் உட்பட தொற்றா நோய்கள் அதிகரித்துக் காணப்படுகின்றது. இரசாயனம் கலந்த மரக்கறி, பழவகைகளை உண்பதே இவற்றுக்கு பிரதான காரணங்களாக அமைகின்றன. நேரடியாக அறுவடை செய்து உடனடியாக உபயோகப்படுத்துவதால் அனைத்து உயிர்ச்சத்துக்களும் உள்வாங்கப்படுகின்றது.

மேலும் மரபணு மாற்றிய விதைகள், தண்டுகளால் வளர்ச்சியடைந்த மரக்கறி, பழங்களை உண்ணும் போது ஏற்படுகின்ற மரபியல் நோய்களிலிருந்தும் எமது சந்ததியினரை காப்பாற்ற முடியும். மேலும் எமது வீட்டுக்கழிவுகளையே உரமாக பயன்படுத்தலாம். அத்தோடு நீரை வீட்டுத்தோட்டத்திற்கு மீள்சுழற்சியாக பயன்படுத்தமுடியும். அத்துடன்இயற்கைக் காற்று அழகிய சுற்றாடல் எம்மை பூரிப்படையச் செய்கின்றது. மேலும் எமது வீட்டுத் தோட்டத்திலே மூலிகைச் செடி, பூ மரங்களையும் நட்டு மேலும் அழகு சேர்க்கலாம். இதனால் பலவகையான குருவிகள், வண்ணத்துப்பூச்சிகள் எமது தோட்டத்தை நோக்கி வருகின்றன. எமது சிறார்களுக்கும் சிறந்த பொழுதுபோக்காக அமையும். எதிர்கால தலைவர்களான எமது பிள்ளைகளும் மரம் நடுகை, வீட்டுத்தோட்ட செயற்பாடுகளால் கவரப்பட்டு பழக்கப்படுவார்கள்.

அத்துடன் எமது வீடும் வீட்டுச் சூழலும் குளிர்ச்சியுடன் காணப்படும். புவி வெப்பமடைதல் செயற்பாட்டை



# இன்னும் வேண்டும் வரங்கள்

இன்னும் வேண்டுமெனக்கு வரங்கள்
இழிவில்லாதோதிடும் நல்சுரங்கள்
பெண்ணாய்ப் பிறந்திட்ட பெருமையின் பயனால்
பெயர் மணக்கும் வகையில் வாழ வேண்டும்
கொண்டதோர் நற்பண்பில் துலங்கியே நாளும்
குணவதி வாழ்வு சிறக்க வேண்டும்
கண்ணான கண்ணியம் காத்திடும் அழகில்
காண்போர் போற்றிட வாழ வேண்டும்

கொலுவேறத் துடிக்கும் கூரான எண்ணம்
கருவறை உதிக்கையில் பெற வேண்டும்
கேளிக்கைப் பொருளாய்ப் பார்க்கும் மாந்தர்
கேடுடைத்துச் சுடரென ஒளிர வேண்டும்
கூலிக்கு மாரடிக்கும் கூட்டம் மிகைத்துக்
கோபுரத்தின் உச்சிதனைச் சேர வேண்டும்
காலத்தின் சூதுதனைக் களையெடுத்துக்
கொள்ளையின்பம் கொட்டியே தர வேண்டும்

ஆதிக்கம் நிறைந்துள்ள ஆணவ உலகில்
அல்லல் புறந்தள்ளி உழைக்க வேண்டும்
சாதிக்கும் எண்ணம் உறுதியாக நிலைத்திட
சளைக்காமல் போராடித் தழைக்க வேண்டும்
விதிமாற்றும் நோக்கில் வேதனைகள் தாங்கி
விடிவெள்ளி உதயமெனக் கிளம்ப வேண்டும்
சதியுடைக்க நாடித் துணிந்து வென்று
சரித்திரம் அடுக்காய்ப் படைக்க வேண்டும்

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுக்கும் முன் செயலாகவும் அமையும். நாம் அதிகமான நேரத்தை வீணான செயல்களிலும் பிரயோசனமற்ற வழிகளிலும் செலவழிக்கின்றோம். ஆனால் வீட்டுத் தோட்டத்தை ஓர் சிறந்த பொழுதுபோக்கு அம்சமாக பயன்படுத்த முடியும். இதனூடாக மனச்சோர்வு, அழுத்தங்களில் இருந்தும் ஆறுதல் கிடைக்கிறது. மனதிற்கும் புத்துணர்ச்சி அளிக்கிறது.

எமது தோட்டத்திற்குள் நுழைகின்ற போது எமக்குத் தேவையானவற்றை நாமாகவே உற்பத்தி செய்து பெற்றுக் கொள்கின்றோம் என்ற திருப்தி உருவாகின்றது. அத்துடன் தரமற்ற மரக்கறிகளை விலை கொடுத்து வாங்குவதை விட புதிய காய்கறிகளை எமது தோட்டத்திலே பெற்றுக் கொள்வதால் பணமும் மிகுதியாகின்றது. ஆரோக்கியமும் பேணப்படுகின்றது. அத்துடன் மிகுதியாக உள்ள மரக்கறிகளை உறவினர்களுக்கு வழங்குவதன் ஊடாக அவர்களையும் ஊக்கப்படுத்தலாம். மேலதிக மரக்கறிகளை விற்பனை செய்வதன் ஊடாக சிறிய அளவில் பொருளாதார ரீதியாக வருமானமீட்டலையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது அயல் நாடுகளிலும் சரி, ஏனைய நாடுகளிலும் சரி வீட்டுத் தோட்டத்தினை அதிகளவான மக்கள் விரும்பி மேற்கொள்கின்றார்கள் ஊக்கப் படுத்தப்படுகின்றார்கள். வீட்டுத் தோட்டங்களை மேற்கொள்ள நிலப்பரப்பு தான் தேவை என்ற நிலை மாற்றமடைந்து, இப்போது நிலம் இல்லாதவர்கள் கூட சிறப்பாக மேற்கொள்கின்றார்கள். மாடி வீட்டுத் தோட்டங்களும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் எமது நாட்டைப் பொறுத்த மட்டில் அரசாங்கத் திட்டங்களினூடாக வீட்டுத் தோட்டம் ஊக்குவிக்கப் படுகின்றது. அரசாங்கமானது தேசிய வேலைத் திட்டத்தினூடாக வீட்டுத் தோட்டத்தை நடைமுறைப் படுத்து கின்றது. அதற்காக ஆர்வமுள்ளவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான வீட்டுத்தோட்ட உபகரணங்கள் வழங்கப்படுவதோடு, வீட்டுத் தோட்டங்களுக்குரிய நாற்றுக்கள், செடிகள், மரங்கள் என்பன கட்டம் கட்டமாக வழங்கப்படுகின்றன. அத்தோடு பிரதேச செயலகம், விவசாய திணைக்களம், சமூநல சேவை நிலையங்கள் இணைந்து தொடராக வீட்டுத் தோட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளையும் தேவையான ஆலோசனை செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றன. அதுமட்டுமன்றி பயிற்சி செயலமர்வுகள், பீடைகளை கட்டுப் படுத்தும் வேலைத்திட்டங்களும் நடை பெறுகின்றன. அத்துடன் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளும் சமர்ப்பிக்கப் படுகின்றன. மேலும் 2023ம் ஆண்டின் சுதந்திர தின சிறப்பம்சமாக சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளர்கள் மாவட்ட மட்டத்தில் (மட்டக்களப்பு) தர நிலைகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

எனவே தான், அந்தளவிற்கு உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி ஆர்வமாய் வீட்டுத் தோட்டங்களை வித்தியாச மான முறைகளில் ஆராய்ந்து செயற்படுத்துகிறார்கள். இது ஒரு வீட்டிற்கும் நாட்டிற்கும் முன்னேற்றகரமான செயற்பாடாகும். ஆகவே சுத்தமானதும் ஆரோக் கியமானதும் நஞ்சற்றதுமான புதிய உணவுகளை பெற்றுக் கொள்ளவும், பணச் செலவை மீதப்படுத்தவும், நோய் நொடியிலிருந்து எதிர்கால சந்ததியினரை பாதுகாக்கவும் வீட்டுத் தோட்டத்தை நாமும் உருவாக்கி பிறரையும் ஊக்கப் படுத்துவோம்.

- ஜனிறா ஜலீல்
காத்தான்குடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் பல் கலாசார சமூகம்

திருமதி. ஏ. யு. எல்.எஸ். அரபா மன்சூர்
கண்டி

மலைவளமும், மண்வளமும், நீர்வளமும் நிறைந்த, இயற்கை எழில் கொஞ்சும் நமது இலங்கை மணித் திரு நாடு, பல்கலாசார சமூகத்தை கொண்டமைந்த அழகிய தீபகற்பமாகும்.

மக்களிடையே தொடர்ந்து வரும் பழக்க வழக்கங்கள் அல்லது பண்புகள் கலாசாரம் என்றே குறிக்கிறது. ஐக்கிய நாடுகளின் விஞ்ஞான கலாசார ஸ்தாபனமான யுனெஸ்கோ "ஒரு சமூகத்தின் தனித்துவமான ஆன்மீக, பொருளாதார, அறிவு சார்ந்த உணர்வு ரீதியான ஒட்டு மொத்த அம்சங்களின் தொகுப்பே கலாசாரம் ஆகும். அது ஒன்றிணைந்து வாழும் வழிமுறை, பாரம்பரியங்கள், நம்பிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கி இருக்கிறது." என்று சலாசாரத்துக்கான வரைவிலக்கணத்தை முன்வைக்கின்றது.

பல சமூகங்களிலும் பல்வேறு கலாசாரங்கள் பேணப்பட்டு வருகின்றன. மதம், உணவு, உடை, மொழி, திருமணம் என்று அனைத்திலும் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் உள்ளடக்கப்பட்டதே கலாசாரம்.

எமது இலங்கை பன்மத, பல் சமய, பலமொழி பேசுகின்ற குழுக்களைக் கொண்ட பல் பண்பாட்டைக் கொண்ட ஒரு நாடு. இங்கு கலாசார பல்வகைமை காணப்படுகின்றது. விகாரைகள், கோயில்கள் பள்ளிவாயில்கள், ஆலயங்கள் சலாசார பல் வகைமையின் அடையாளங்களாக திகழ்கின்றன.

இலங்கையின் கலாசாரம் பல்வேறு பட்ட காரணிகளால் தாக்கத்துக்கு உள்ளான போதிலும் அது தன்னுடைய புராதன அம்சங்களை தக்க வைத்துக் கொண்டுள்ளது. நமது இலங்கை நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், மலாய இனத்தவர்கள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பரந்து பட்டு வாழ்கின்றனர். பௌத்தம், தமிழ், இஸ்லாம், கிறிஸ்தவம் என்ற மதங்களை பின்பற்றுபவர்களாகவும் உள்ளனர். சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்பன பெரும்பாலும் பேசப்படும் மொழி களாக விளங்குகின்றன.

எனவே இலங்கை பல்லின பன்மைத்துவ கலாசார சமூகத்தை கொண்ட மைந்துள்ளது என்பது கண்கூடு. ஆள்சார் சட்டங்கள், கண்டிய சட்டங்கள், தேசவழமைச் சட்டங்கள், முஸ்லிம் சட்டங்கள் என பல நூற்றாண்டுகளாக மக்கள் அவற்றின் அடிப்படையிலேயே தமது கலாசார பாரம்பரியங்களை நடை முறைப்படுத்தி வருகின்றனர். ஒரு கலாசாரம் பிற கலாசாரத்தில் ஊடுருவிக் காணப்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

தத்தமது கலாசாரம்சார் கடமைகளுக்கான உரிமைகள் மறுக்கப்படாதவரை நாட்டில் அந்நியோன்ய சகோதரத்துவம் நிலைபேரடையும். இலங்கையர் என்ற இலங்கையின் தேசிய அடையாளம் கலாசார பாரம்பரியங்கள் கட்டி எழுப்பப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரங்களைத் தேடி

என்னைச் செதுக்கியவனே!
எனக்கென்று ஒருலகை
பக்குவமாய் வடித்த ஸவனே!
உடல் அறிவு ஆன்மாவென
அடையாளம் தந்தவனே!
பிறப்பெனும் புதினத்தில்
தனிப்பந்தி அமைத்தே நீ
சிறப்பாகத் தலைதூக்க
காரணமாய் ஆனவனே!

தந்ததா... உன் கிருபை!
தடுத்ததும் உன் நாட்டம்!
எடுத்ததும் உன் முடிவு!
ஏற்கிறேன் நாயனே!
கிடைத்ததில் திருப்தியும்
தராததில் நலவும்
பறித்ததில் புரிதலும்
கொண்டுதான் இயங்கினாலும்
ஏகனே! ஏக்கமொன்று
என்னிடத்தில் உள்ளதிங்கு!

தந்துள்ள ஆற்றலில் உன்
தனித்துவம் போற்றவேதான்
போதாமை நிறைந்திங்கு
பற்றாக்குறை பலவுண்டு!
அகரம்தான் தெரிந்தாலும்
சிகரத்தில் உனைப்போற்ற
சொல்லெடுத்து கருத்தமைக்க
வற்றாத நதிபோல எனக்குள்
இன்னும் வேண்டும் வரங்கள்!

பலகோடி தந்தாலும் உனை
வர்ணித்து வார்த்தை கோர்த்து
எனதன்பைச் சொல்லிடவே
முடியுமோ தெரியவில்லை!
இது தீராத தாகம் தான்!
ஓயாத அலையும் தான்!
வெற்றுக் கேள்வியாய் அல்ல
வேள்வியாய் எனை நிறுத்தி
யாகமாய் தியாகம் காட்ட
உனதருளை வேண்டுகிறேன்
ரப்பே!

றின்ஸியா நிஸாம்
(பேருவளை)

படுவதனாலேயே சிறப்பாக காட்சி அளிக்கின்றன.

சமூகமயமாக்கல் மூலம் கற்றுக் கொள்ளப் படும் நடத்தைக் கோலங்களின் தொடர்பு பகிரப்படும் வடிவங்களாக கலாசாரப் பண்புகளை பேணிப் பாதுகாக்க முடியும். என்பதை நம் நாடு பறைசாற்றி நிற்கின்றது.

இன்று இலங்கையில் பல்கலாசார சமூக ஒருங்கிணைப்பாக பாடசாலைகள் விளங்குகின்றன. பல பாடசாலைகள் மும் மொழிப் பாடசாலைகளாக இருக்கின்றன. இதனால் மொழியூடாக சமூகங்களிடையே பல்கலாசாரத் தன்மை வெளிப்படுத்தப் படும். அதே போன்று பல இன மாணவர்கள், ஆசிரியர்கள் கூட்டாக தொழிற்படும் போது கலாசார பண்பாட்டுப் பாரம்பரியங்கள் வெளிக் கொணர ஏதுவாக அமைகின்றன.

ஆரம்பப்பிரிவு பாட அலகிலே பண்டி கைகள் கலாசார புரிந்துணர்வுக்கான அடித்தளமாக காணப்படுகின்றது. சித்திரைப் புத்தாண்டு விழா, தைப் பொங்கல் விழா, பெருநாள் விழா நத்தார் தினவிழா அந்தந்த மதத்தினர் அவற்றை நடைமுறைப்படுத்துவதை ஏனைய வர்களும் கண்டு களிப்பதோடு மட்டு மல்லாமல் கலாசார பண்பாட்டுத் தன்மைகளை அறிந்து கொள்ளவும் முடிகிறது

இலங்கையரின் வாழ்க்கைமுறையானது அவர்களது சமையற்கலை திருவிழாக்கள், என்பவற்றில் பிரதி பலிக்கின்றது. ஒவ்வொரு இனத்தவரும் தத்தமது பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கு இயை வாக. உடைகளை அணிகின்றனர். சிங்கள மக்கள் ஒசரி, ரெத்த, ஹெட்ட, என்பவற்றை பாரம்பரிய கலாசார உடைகளாகவே இன்று வரை அணிந்து வருகின்றனர். தமிழ் மக்கள் பாவாடை தாவணி, வேட்டி. என்பவற்றை தமது கலாசார உடைகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிகின்றனர். முஸ்லிம் மக்கள் தமது கலாசார உடைகளாக தொப்பி, ஜுப்பா, ஆண்களும், அபாயா, ஹிஜாப்பை பெண்களும்; அணிகின்றனர்.

இலங்கையில் பல்கலாசார முறையின் எடுகோளாக எல்லா இன மக்களிலும் ஆண்கள் சாரம், சேட் ட்ரவுசர் என்பனவும், பெண்கள் சாரி, கவுன் என்பனவும் அணிகின்றனர்

இவ்வாறான விடயங்களை நோக்கும் போது நாம் இலங்கையர் என்ற ஒருமைப்பாடு தோன்றுவதை அவதானிக்க முடிகிறது.

அவ்வாறே நெல் அரிசிச் சோறு நமது இலங்கைவாழ் மக்களின் பிரதான உணவாக இருந்த போதிலும் சிற்சில உணவு வகையறாக்களை தமது பாரம்பரிய உணவுகளாக தயாரித்து வருகின்றனர்.

உதாரணமாக பலகாரம் பாற்சோறு, கொகிஸ் என்பன சிங்கள மக்களின் கலாசார உணவாகவும், லட்டு, பாயாசம் என்பன தமிழ் மக்களின் கலாசார உணவாகவும், வட்டிலப்பம், பிரியாணி என்பன இஸ்லாமிய மக்களின் கலாசார உணவாகவும் நடைமுறையில் காணப்படுகின்றது.

ஐந்து விரல்களும் ஒரே மாதிரியானதல்ல. ஆனால் ஐந்து விரல்களும் ஒன்றுபட்டாலே ஒரு பொருளை ஒழுங்காக கையாள முடியும். தனித்து இயங்குவதும், தன்னிச்சையாக செயற்படுவதும் கலாசார பண் பாட்டுப் பாரம்பரியங்களையும், ஒற்றுமை யையும் சிதைக்கவல்லன.

நம் தாய்த் திருநாடாகிய இலங்கையில் பல்கலாசார பன்மைத்துவ சமூதாயமாக தொன்றுதொட்டு இன்று வரை இருந்து வருவது வெள்ளிடை மலை. கால வெள்ளத்தில் பல்கலாசார பன்மைத்துவத்துக்குஎதிரானசெயற்பாடுகளால்இனமத கலாசார முரண்பாடுகளை தோற்றுவித்த சந்தர்ப்பங்களும் இல்லாமலில்லை.

கலாசார பண்பாட்டிலிருந்து விடுபட்டு எந்த மனிதனாலும் தனித்து வாழ முடியாது. நான் என்று சொல்லிப் பாருங்கள். உதடுகள் ஒட்டுகின்றனவா இல்லையே நாம் என்னும் போது உதடுகள் இணைகின்றன. எனவே நாம் என்ற பன்மைத்துவம் நாட்டிலே மிளிர வேண்டும்.

ஒரு மனிதனை பூரணப்படுத்தும் கலாசாரத்தை காப்பாற்ற வேண்டுமாயின் கல்வியறிவு, விழிப்புணர்வு, நல்ல விழுமியங்கள் முதலான கலாசாரத்தின் சகல கூறுகளையும் கட்டியெழுப்ப வேண்டும்.

"கலாசாரம் என்பது அறிவு, வழிபாடு, கலை, சட்டம், பழக்கவழக்கங்கள், மதிப்பீடுகள் மற்றும் சமூகத்தில் வாழும் பிரஜை என்ற வகையில் மனிதர்களால் பெற்றுக் கொள்ளும் பழக்கவழக்க ஆற்றல்களின் கூட்டாகும்" என்ற மானிடவியலாளர் ஈ. பி டய்லர் கலாசாரம் பற்றி கூறியுள்ள எடுகோளுக்கிணங்க,

பல்வேறு மொழிகளை பேசுகின்ற சமூக மக்கள் தமது மொழியைப் போலவே ஏனைய மொழிகளையும் மதித்து கற்றுக் கொள்வது பல் கலாசார சமூகத்தின் நிலைப் பேற்றிற்கு அவசியமாகும். சமூகத்தில் நிலவும் வெவ்வேறு சம்பிரதாயங் களும் பழக்க வழக்கங்களும் எதிர்கால சமூகத்திற்கு பாதுகாத்து வழங்கப்பட வேண்டும்.

இலங்கை மக்களாகிய நாம் பல்கலாசார சமூகமாகவே வாழ்ந்து வருகின்றோம். அனைவரும் ஒன்றி இலங்கையர் நாம் என்ற ஏக மனதுடன் நடை பயில்வோமாக!.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரத்தியேக வகுப்புகளால் பெற்றோர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்




## லைலா அக்ஷியா
மனநல ஆரோக்கியக் கல்வி ஆசிரியர்
(OUSL. Dip in psychology)


'என்னுடைய மகள் இந்த வருடம் ஓ லெவல் கணிதத்தில் ஏ சித்தி பெற்றிருக்கிறாள்.. நீங்க பயமில்லாமல் ரசிக சேர் கிட்ட டியூஷன் அனுப்புங்கள்...'

'இவங்க டியூஷன் படிப்புக்கு ஒரு நாளைக்கு 2000 ரூபாய்க்கு மேல் செல வழிச்சு இருக்கிறேன்.. ஆனால் ஒரு பிரயோசனமும் இல்லாமல் ஃபெயில் மார்க்கோடு வந்திருக்கிறாளே..'

இது இரண்டு தாய்மார்களுக்கிடையில் பரிமாறப்பட்ட கருத்தல்ல. எல்லாப் பெற்றோர்களும் பிரத்யோக கல்வி விட யத்தில் தங்கள் பிள்ளைகள் சார்பாக தொடர்ந்து வெளிப்படையாகக் கூறும் எதிர்மறையான கருத்துக்களே இவை.

பூரணம் இல்லாத ஒன்றை பரிபூரண மாக்குவதற்கு இயன்ற அளவில் முயற்சிக் கிறது உலகம். காரணம் ஒருவேளை ஏற்கனவே அதில் ஏற்பட்டுள்ள குறை பாடுகள். அல்லது அது சம்பந்தமாக கொண்ட மேலதிக தேவைகள்.

இந்த அடிப்படையில் தான் பிரத்தியேக வகுப்புகளை நான் காண்கிறேன்.

பாடசாலைக் கல்வி மாத்திரமே போதுமானது. இந்த பிரத்தியேகக் கல்வி ஆசிரியர்கள் வெறும் பணத்தை நோக்கமாகக் கொண்டதினால் இது கல்வித் தேவைக்கு அப்பாற்பட்ட ஒரு விடய மென்று குறிப்பிடும் மக்களுக்கு மத்தியில் இவற்றின் அத்தியாவசியம் ஒவ்வொரு மாணவர்க்குள்ளும் பெற்றோருக்குள்ளும் தொடர்ந்து இருக்கவே தான் செய்கிறது.

எந்தக் கட்டத்திலும் அதை விட்டு அவர்களால் வெளிவர முடியாத நிலை யில் கல்வி மட்டமும், அதன் நிலையும், அதனடைவுகளும், எதிர்காலத் தேவை களும் செல்வாக்கு செலுத்துகின்றன.

இருந்த போதிலும் இவற்றினால் ஏற்படு கின்ற சவால்கள் மாணவர்களுக்கு மாத்திர மன்றி பெற்றோர்களுக்கும் தலையிடி யையும், பல்வேறு விதமான மன உளைச்சல் களையும் உருவாக்கி விடுகின்றன என்பது உண்மை.

எல்லாப் பிள்ளைகளும் ஆறு வயது முதல் தமக்குத் தேவையான கல்வி யறிவை பெற்றுக்கொள்வது அவர்களது உரிமையாகவும் அவற்றை முறையாக வழங்குவது சமூகத்தின்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

/அரசின் கடமையாகவும் இருக்கிறது. இந் நிலையில் பிரத்தியேகக் கல்வியென்பது வகுப்பாசிரியர்களால் வடிவமைக்கப்படும் போது தான் முதலாவது பிரச்சினை எழுகிறது.

'மேலதிகமாக நேரம்' என்பது மட்டுமே இங்கு கையாளப்படுகிறதே தவிர மேலதிகமான கல்வி என்று எதுவும் வழங்கப் படுவது இல்லை. இதன் போது இவர்கள் இந்த மேலதிகமான நேரத்திற்கு ஒரு கட்டணம் அறவிடும்போது அவர்கள் தங்கள் கடமையை தவறாகப் பயன்படுத்துவதாகவே கொள்ளப்படுகிறது. தன் வகுப்பாசிரியரே இதற்காக பரிந்துரைக்கும் போதும் வலுக் கட்டாயமாக வரவைக்கும் போதும் அவற்றை தட்டிக் கழிக்க முடியாமல் இணைந்து கொள்ள உடன் படும் மாணவர்கள்/ பெற்றோர்கள் நிலை கவலைக்கிடம்.

முடிக்கப்பட வேண்டிய பாடவிதானங்கள் முறையான திட்டமிடல்களில்லாமல் அல்லது அனுபவமில்லாமல் ஏனோ தானோ என்று கற்பிக்கப்படுவதே இந்த சூழ்நிலைக்குக் காரணமாகிறது.

தனது கல்வியறிவை பூரணமாக பாடசாலையில் பெற்றுக்கொண்ட ஒரு மாணவன் தனது மேலதிகமான அறிவை அல்லது முறைசாரா பல செயற்பாடுகளை கற்றுக் கொள்ளக்கூடிய நேரமாக பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரங்களை பயன்படுத்தப் படுவதற்கான சந்தர்ப்பம் இதன் போது பறிக்கப்படுகிறது.

பொதுவாக இந்தப் பிரத்தியேகக் கல்வி பணத்தை இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு மாத்திரமே நடத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது.

'டியூஷன் காசு உண்ணிகள்' என ஒரு பெயரோடு அழைக்கப்படுமளவிற்கு ஒரு வெறுப்பு இருக்கத்தான் செய்கிறது ஆனால் இது கசப்பான உண்மையாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

நல்ல,சிறந்த கல்வித் தகைமை உடைய ஆசிரியரால்தொடர்ந்தும்இந்தசெயற்பாடு நடைபெறும் போது மாணவர்கள் தமக்கே அறியாத நிர்ப்பந்தத்தினால், சூழ்நிலையினால், கல்வியின் மீது கொண்ட ஆசையினாலும்,தமது கல்வி மட்டங்களை உயர்த்திக் கொள்ளவும் உள்வாங்கப்படும் போது அதற்காக அவர்களிடமிருந்து பாரபட்சமின்றி அறவிடப்படும் அதிக பணம் இந்த ஆசிரியர்களுக்கு மேலதிக இலாபமாக ஈட்டப்படுகிறது.

அவர்களுடைய வளங்களையும், கல்வி வழங்கல்களையும், நேர விரயத்தையும், உடல் உழைப்பையும் தாண்டி அருமையான ஒரு இலாபம் இப் பெற்றோர்களின் மூலம் ஈட்டப்படுகிறது என்ற வகையில், இலாப நோக்கத்திற்கு அடிமையாகும் ஆசிரியர்களது உள்ளம் பல்வேறுபட்ட கவர்ச்சியான அணுகு முறைகளையும், புதினங்களையும் செலுத்தி மாணவர்களை உள்வாங்க போட்டி போடுவதை அவதானிக்க முடிகின்றது. போலி ஏமாற்றம் ஆகியவற்றை அடையாளம் கண்டுகொள்ள பெற்றோர்கள் நிறையவே தடுமாறுகிறார்கள். இதனால் நியாயமான முறையில் மாணவர்களுக்குக் கல்வியை பிரத்தியேகமாக வழங்குபவர்கள் கூட இதே எதிர்மறையான பார்வையின் கீழ் பாதிக்கப்படுகிறார்கள்.

பாடசாலைகளில் பாடத்திட்டத்தினை பூரணப்படுத்த இயலாதவர்கள், பிரத்தயேகமாக அதனை முடிப்பதாக வாக்கு தருகின்றனர். அதை பாடசாலையிலேயே இலவச கல்வியோடு சேர்த்து பிரத்தியேகமான நேரங்களில் வழங்கலாமே என்பது அன்று தொட்டு இன்று வரையான வாதம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண தரம் அல்லது உயர்தரம் கற்கும் மாணவர்களுக்காக ஒரு பாடத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கு 2000 ரூபாய் அறவிடப்படுகிற தென்பதை நேரடியாக அறியக் கிடைத்தது.

பொருளாதார நெருக்கடிகள் எந்தக் காலத்திலும் தீர்ந்ததாகவோ அல்லது குறைந்ததாகவோ இல்லை. இப்படியிருக்க தன் கல்வியை ஆதரித்து, ஒரு அறிவு சார்ந்த எதிர்காலத்தை உருவாக்கி, தனது திறமையினால் சுயமாக வாழ்வதற்கான அடிப்படை ஆவல், முயற்சி என்பன முதல் கட்டத்திலேயே அநியாயமாக காவு கொடுக்கப்படுகின்றன.

ஒரு சில ஆசிரியர்களால் தம் பிரத்தியேகக் கல்வியோடு சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு மாத்திரம் சலுகைகளை வழங்கப்பட்டு பாடசாலைகளிலோ பரீட்சைகளிலோ மாணவர்கள் அசாதாரணமாக நன்மைகளை பெற்றுக் கொள்கின்றனர். கல்வியின் சமநிலைப் பரம்பல் இதில் தளம்பலடைகிறது. தனது பிரத்தியேக கல்வியை பெற்றுக் கொள்ளவில்லை என தண்டிக்கப்பட்ட மாணவர்களின் கதை ஒருபுறம் இருக்கிறது. ஏனைய ஆசிரியர்களை மட்டம் தட்டும் நிலை தெரிந்தோ தெரியாமலோ நிகழ்கிறது.

டியூஷன் கல்வியாசிரியர்களால் முறையற்ற விதத்தில் பகிரப்படும் பரீட்சை வினாத்தாள்கள் மூலம் ஏனைய சாதாரண மாணவர்களின் கற்றல் முயற்சி கூட வீணாகி விடுகிற அனேக கதைகள் மறுபுறம்.

இது எல்லாவற்றையும் விட பெற்றோர்கள் முகங் கொடுக்கும் மிகப்பெரிய சவால் 'பாதுகாப்பு'. ஆசிரியர்களால் மாணவர்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படும் சம்பவங்கள் இங்கிருந்தே அநேகமான முறைப்பாடுகளாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

மாணவர்களுக்கிடையே ஏற்படும் தகராறுகள், வெளிச்சொல்ல முடியாத மன உளைச்சல்கள், சில அநாகரீகமான விடயங்கள், மிரட்டல், அநீதி, தற்கொலை, கொலை சம்பவங்களையும் இது ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

இத்தகைய பாரிய சவால்களுக்கும் மத்தியில் மாணவ சமுதாயமும் பெற்றோர்களும் கல்வியைப் பெற போராட வேண்டியிருக்கிறது என்றபோதிலும் இந்த நிழல் கல்வி எனப்படும் இப் பிரத்தியேக செயன்முறையை இல்லாதொழிப்பது முற்றிலும் முடியாத காரியமாகும். ஏனெனில் உண்மையான சேவை நோக்கில், இலாப மீட்டும் நோக்கற்ற, தன்னலமற்ற ஆசிரியர்கள் சமூகத்தில் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். எந்த ஒரு விடயத்திற்கும் நன்மை தீமையென இரண்டு பக்கங்களிலிருக்கின்றன என்பது உண்மை.

பிரத்தியேக கல்வி உலகளவில் விரிவடைந்து வருகையில் இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. 'இலங்கையில், துணைத் தனியார் பயிற்றுவிப்பு, டியூஷன் கல்வி என்பது பல மாணவர்களின் அன்றாட அனுபவங்களில் நீண்ட காலமாக ஒரு பரவலான பகுதியாக இருந்து வருகிறது' (2003). இலங்கை அரசாங்கம் ஒரு மாணவருக்கு பெரும் தொகையை செலவிட்டாலும் தரம் ஐந்தாம் புலமைப்பரிசில் பரீட்சை முதல் சில வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் மாணவர்களிடையே தனியார் கல்விக்கான தேவை மிக அதிகமாக இருந்தது. 1990 இல், 75 சதவீத மாணவர்கள் தனியார் டியூஷன் வகுப்புகளுக்குச் செல்வதாக மதிப்பிடப்பட்டது. இந்த விகிதம் G.C.E (A.L) கலை மாணவர்களிடையே 62 சதவீதமாகவும், G.C.E (A.L) வணிக மாணவர்களிடையே


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

67 சதவீதமாகவும், G.C.E (A.L) அறிவியல் மாணவர்களிடையே 92 சதவீதமாகவும் உள்ளது (டி சில்வா 1994), இது இக்காலத்தில் மூன்று மடங்காக உயர்ந்திருக்கலாம்.

பூரணமான கல்வித் தேவைக்கு 'டியூஷன் கல்வி' உண்மையில் முக்கியமா என்பது இன்னும் தெளிவாகத் தெரிய வில்லை, ஒருபுறம், இலங்கையில், அரசாங்கம் எப்போதும் கல்வியை அதன் செலவில் வழங்க முயற்சிக்கிறது. மறுபுறம், மக்கள் எப்போதும் இலவசக் கல்வியைக் கோருகிறார்கள். இத்தகைய சூழ்நிலையிலும் பிரத்தியேகக் கல்வித் தேவை அதிகரித்து வருகிறது. இதனால், தனியார் கல்விக்கான வீட்டுச் செலவும் அதிகரித்து வருகிறது. பெற்றோர்கள் தனியார் கல்விக்காக அதிக பணம் செலவழிக்க வேண்டியுள்ளது.

இப்படி தனியார் கல்விக்கான தேவை அதிகரித்து வருவதற்கான காரணங்கள் ஏன் எனக் கண்டறிய வேண்டும்.

சரி.. உண்மையான ஒரு சேவை நோக்கில் வழங்கப்படும்பிரத்தியேககல்வியை எவ்வாறு அறிந்து கொள்வது? ஆசிரியர்களின் குறித்த சில செயற்பாடுகளின் மூலம் இதனை அறிந்து கொள்வதும் இனங்கண்டு கொள்வதும் மாணவர்கள் / பெற்றோர்களுக்கு அவசியமாகிறது.

- ☐ சேவை மனப்பான்மை
- ☐ உழைப்பிற்கான நியாயமான கூலி
- ☐ மாணவர்களின் முன்னேற்றத்தில் பிரத்தியேகமான சிரத்தை எடுத்தல்
- ☐ பெற்றோர்களுடன் பிள்ளையின் விடயத்தில் சிறந்த தொடர்பைக் கையாளல்.
- ☐ மேலதிகமான கல்விச் செயற்பாடு களின் மூலம் பிள்ளைகள் புரிந்து கொள்ள வேண்டிய அல்லது பின்தங்கி நிற்கும் பாடத்தில் அதி கூடிய கவனம் செலுத்துதல்.
- ☐ பிள்ளைகளின் பரீட்சை புள்ளி அடைவுகளின் உண்மைமட்டத்தின் நிரூபணம்.

போன்ற செயற்பாடுகளினால் இந்த பிரத்தியேக கல்வி இவர்களுக்கு சவாலாக அமைகிறதா? என்பதை அறியலாம்.

ஒரு பிரச்சினையை இல்லாதொழிக்கவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாத ஒரு நிலையில், அதிலிருந்து விடுபட, சரியான 'மாற்றுத் திட்டங்களை' உருவாக்குவது மாத்திரமே எல்லா சவால்களுக்கும் ஒரே வழி!

## மருத்துவக் குறிப்புகள்

☐ தினமும் 5 கிராம் நன்னாரி வேரை பசும்பாலுடன் குடித்து வந்தால் நீர் கடுப்பு மற்றும் நீர் சுருக்கு நீங்கும்

☐ சின்ன வெங்காயம் அரைத்து சாறு 3 ஸ்பூன் அளவு எடுத்து அதில் சம அளவு செக்கு நல்லெண்ணெய் கலக்கி அதில் 3 சொட்டு க்களை வலிக்கும் சொத்தை பல் மீது வைத்தால் சிறிது நேரத்தில் சொத்தைப் பல் பூச்சியும் இறந்து பல் வலியும் குணமாகிவிடும்.

☐ கற்பூரம் சிறிய வில்லை 1 எடுத்து சின்ன வெங்காயம் சாறு 10மி கொண்டு அதில் 2 சிட்டிகை அயோடின் உப்பு கலந்து பிறகு மென்மையான பஞ்சில் அந்த மருந்தை எடுத்து மரு உள்ள இடத்தில் தடவி வர மரு விழுந்துவிடும்

பஸ்லியா சித்தீக்
சம்மாந்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தி



நளீபா அஸீஸ் அஸீம்
வெலம்பொட

# புன்னகைக்கும் பூக்கள்

பூக்களைப் பிடிக்காத எந்த ஒரு மனித உயிரும் உலகில் இல்லை. அவை இந்த பூமியை அலங்கரிக்கும் வண்ணப் படைப்பு. அதிசய படைப்பு. இறைவனின் அற்புதமான கொடை. மனிதனுக்காவும் மனித வாழ்வுக்காகவும் படைக்கப் பட்டவை அவை. இந்த பார் முழுதும் பரவிக் காணப்படும் இப்பூக்கள் மூலை முடுக்குகள் எல்லாம் மலர்ந்து மணம் பரப்பு கின்றன. புன்னகையுடனே அவை மலரும் அழகு இந்த பூலோகத்தையே புத்து ணர்ச்சிக்கு உள்ளாக்குகின்றன என்றால் மிகையில்லை. எண்ணற்ற வடிவங்கள் எண்ணற்ற நிறங்கள். எண்ணற்ற இனிய வாசனைகள். சொல்ல முடியாத இனிமை கள். ஒரே நிறத்துக்குள் பல நிறங்கள். ஒரே வடிவத்துள் ஆயிரமாயிரம் வடிவங்கள். இவற்றைப் படைத்த இறைவன் எவ்வளவு பெரிய இரசிகனாக இருக்கிறான். தன் படைப்பாம் மனிதனுக்காகவே இவை என்றால் உள்ளமெல்லாம் உவகையால் துள்ளிக் குதிக்கிறது.

எவ்வளவு கஷ்டப்பட்டு தனது இதழ் களை விரிக்கின்றது. அந்த விரிப்பில் என்ன தொரு புன்னகை? பூலோகத்தையே புதுமையாக்குகிறதே! சத்தமில்லாமலே பூத்து சத்தமில்லாமலே புன்னகைத்து சத்தமில்லாமலே விடைபெறும் இந்த பூக்க ளுக்குள் அழகிய பூகம்பமே நிகழ்கிறதே!

அரும்பாய் உருவெடுத்து மொட்டாய் எழுந்து பூவாய் பூத்து புன்னகையுடனே இந்த அகிலத்தை ஆக்கிரமித்துக் கொள் கிறதே. என்ன அதிசயம் இயற்கையின் கொடையில்!

பூத்ததும் எங்கோ இருந்த வண்டுகளும் தேனீக்களும் வந்து வந்து இதழ்களைக் கோதி அதில் சிந்தும் தேனை உண்டு மனிதனுக்கு காணிக்கையாக்குகின்றனவே. அப்போதெல்லாம் அவைகள் தர்மவான் களாகிவிடுகின்றன. அவைகள் பெண்களின் தலைகளில் சூடப்பட்டு அழகின் கிரீடங்க ளாகின்றன. அதுமட்டுமன்றி கழுத்தில் பூமாலையாகி மணமக்களை வாழ்த்திக் கொள்கின்றன. மணவறையில் போதையாகி மணம் கமழ்கின்றன. காதலின் சின்னமாய் ஒற்றை சிவப்பு ரோஜா சாட்சியாகின்றது.

பூக்களும் தன்னுடைய மதிப்பையும் கண்ணியத்தையும் ஒரு போதும் இழந்து நிற்பதில்லை. பூக்களின் ராணி ரோஜாவைத் தொட வேண்டுமானால் முற்களைத் தாண்டிதான் தொட வேண்டும். தொட்டாலும் குத்தியே போட்டுவிடும். அவைகளுக்கும் பெரும் கற்புண்டு. அனிச்ச மலர் மூச்சுப்பட்டாலே வாடிவிடும். பாடையிலே போகும் போது கூட வருவது இந்த பூக்கள் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்க்குப் பிள்ளை பூக்கள். காதலனுக்கு காதலி பூ. மென்மைக்கு இலக்கணம் பூ. பெண்மைக்கு உதாரணம் பூ. பேரழகுக்கு ஆதாரம் பூ. அரண்மனையின் முன்றில் பூவின் இராஜ்யம். அந்தப்புரத்துள்ளேயும் பூவின் ஆளுமை. அவற்றுக்கென தனியான தோட்டம் பாரெங்கும் பல இடங்களில். நீர் என்ன நிலமென்ன எல்லாம் அவற்றுக்கு அத்துப்படி. அவை சில பூக்களின் முடிவில் ஆயிரம் பூக்கள் புன்னகைக்கும். சில கனி களின் பின்னணியில் ஆயிரமாயிரம் பூக்களின் தியாகங்கள். பூப்பதும் உதிர்வதும் விதி என்ற போதும் அவைகள் பூக்காமல் வேலை நிறுத்தம் செய்வதில்லை. வாசனையை தனக்குள் மட்டும் அடக்கி சுயநலமாய் இருந்ததில்லை. காற்றோடு கோபித்து வாசனையை மறுத்ததில்லை. களங்கப்படாமலே கருவுரும். அவைகளும் காதலிக்கின்றன. சூரியனின் காதலியாக தாமரையும் சந்திரனின் காதலியாக ஆம்பலும் திகழ்கின்றன. அவற்றுக்கு மணம் இருப்பது போல நல்ல மனமும் இருக்கின்றன. அதனால் தான் இந்த உலகத்துக்கு பூலோகம் எனக் கூறப்படுகின்றதோ!

---

# அழகுக் குறிப்புகள்

- கோடையில் வெயிலில் சென்று வந்தால் முகம் கறுத்து விடும்.இதைப் போக்க... ஒரு கரண்டி எலுமிச்சை சாறுடன் தேன் கலந்து முகத்தில் மேல் நோக்கி தடவி அரை மணி நேரம் கழித்து கழுவி வந்தால் முகம் பளபளப்பாக இருக்கும்
- முகத்தில் எண்ணெய் வடிவதை நீக்க, ஒரு பாத்திரத்தில் சிறிதளவு நீர் விட்டு கொதிக்க வைத்து, அதில் வரும் ஆவியை முகத்தில் படும்படி பிடித்து வந்தால் எண்ணெய் பசை நீங்கி விடும்.
- இரண்டு ஸ்பூன் தயிர் ஒரு ஸ்பூன் தேன் ஒரு ஸ்பூன் எலுமிச்சை சாறு மூன்றையும் கலந்து. முகத்தில் மேல் நோக்கி லேசாக மசாஜ் செய்து ஒரு மணி நேரம் கழித்து, குளிர்ந்த நீரில் கழுவி வந்தால் முகம் பளபளப்பாகும்
- சிறிது தேன் மற்றும் ரோஸ் வாட்டரை ஒன்றாக கலந்து, உதட்டில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, நீரில் கழுவ வேண்டும் இப்படி தினமும் செய்து வந்தால், உதட்டில் உள்ள கருமை மற்றும் வறட்சி நீங்கி, உதடுகள் அழகாக இருக்கும்.
- குளிர்ந்த நீர் சிறிதளவு, அதனோடு பால் சேர்த்து துணியில் தொட்டு, முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து முகத்தை கழுவிவிடவும். இதை தொடர்ந்து செய்வதால் முகம் பளபளப்பாகவும், மிருதுவாகவும் மாறும்.
- தக்காளி, வெள்ளரிக்காய் இவைகளை நன்றாக அரைத்து, இதனுடன் முல்தானி மெட்டி கலந்து முகத்தில் தடவி, காய்ந்ததும் கழுவினால் முகம் பொலிவு பெறும்.

பஸ்லியா சித்தீக்
சம்மாந்துறை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தின் நித்திலமாய் இலங்கிடும் எங்களூர்

சிறீலங்காவுக்குள் சின்ன
சவூதி அரேபியாவாய்
கிழக்கிலங்கையின்
காயல் பட்டினமாய்
நெஞ்சங்கள் அனைத்திலும்
நிலைத்த நாமமாய் இருந்திடுமே
எங்களூர் காத்தான்குடி

ஊருக்கு அழகு சேர்க்கும்
ஆறும் கடலும்
ஆலமே வியந்து நோக்கும்
அல் அக்ஸா நகல் பள்ளிவாயிலும்
வீதிக்கு வளம்சேர்க்கும்
பேரீத்தமரங்களும்
சன்மார்க்கம் பிரதிபலிக்கும்
சுற்றுவட்டங்களும்
நிறைந்ததெங்கள் காத்த மண்.

வரலாற்றைத் திரும்பிப் பார்க்க
வரமாய் வாய்த்த அருங்காட்சியகமும்
விருப்போடு உபசரிக்கும்
விருந்தினர் விடுதிகளும்
வரப்பிரசாதம் என்றே
வந்தமைந்த ஊரு தானே

சிங்கப்பூராய் தடம்பதிக்கும்
சிறப்பான கடைத்தொகுதிகளும்
மங்காத அழகு சேர்க்கும்
மனிதநேய இதயங்களும்
நிறைந்ததெங்கள் காத்த நகர்

ஆன்மீகத்தின் அத்தாட்சியாய்
அழகிய இறையில்லங்கள்
வான்மறை போதிக்கும்
குர்ஆன் மத்ரஸாக்கள்
அறிவியல் ஓங்கி நிற்கும்
அரச பாடசாலைகள்
அறபு பயிற்றுவிக்கும்
அரபுக் கல்லூரிகளும் நிறைந்து
அழகு சேர்க்கும் எங்களூரு.

தடம்பதித்திடும் தளவைத்தியசாலையும்
புடம் போட்டிடும் சன்மார்க்கத்தலங்களும்
இடங்கள் தோறும் நிறைந்து ஈமானிய
மணாங்கமழும்
சடங்குகளும் சம்பிரதாயங்களும்
சரித்திரத்தைப் பேசுகின்ற
பூர்வீகத் தலங்களுடன்
புதுப் பொலிவு பெற்று
புண்ணியம் மேவிடும்
கண்ணியம் பெற்ற ஊரு.

இலங்கைத் தேசத்தின்
இன்னுமொரு சுற்றுலாத்தளம்
மெரீனாவை மிஞ்சிடும்
மனங்கவர் கடற்கரை
வரலாற்றில் பெயர் பெற்ற
வர்த்தக மையம்
தரணியில் பரந்து வாழும்
தன்மையார் நிறைந்த மண்

ஈழத்தின் நித்திலமாய்
இலங்கிடும் எங்களூர்
காத்தநகர் மகிமை காண
நேத்திரங்கள் மலர்ச்சிகொள்ள
சுற்றத்தோடு வந்து நீ...ங்கள்
சுற்றிப்பார்த்து மகிழ்ச்சி கொள்க.

- ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org